# இடைத்தேர்தல்பற்றி இந்தியப்பிரதமர் விளக்கம்


Registered ..

விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 321
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 15 ஷவ்வால் 30 புதன்கிழமை (30-12-70)



திருவெம்பாவை
பூசையை
முன்னிட்டு
திறமான
சர்க்கரை
மொத்தமாகவும்-சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. வைத்திலிங்கம் & கோ.
45, கே.கே.எஸ். றேட்; யாழ்ப்பாணம்.
போன்: 663


புதுடில்லி, டிச. 29

''சோஷலிஸ அமைப்புக்கேற்ப அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டுமா? என்பதை முன்வைத்தே தமது கட்சி இத்தேர்தலில் போட்டியிடும்'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

இன்று புதுடில்லியில் நடந்த பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் நிறைந்த இம்மகாநாட்டில் திருமதி இந்திரா காந்தி நிருபர்களின் கேள்விகளுக்குப் பதில்களை அளித்தார்.

நல்ல விஷயங்களுக்காகத் திருத்தங்கள் செய்யப்படுமே தவிர, ஜனநாயகத்திற்கு விரோதமாக அடிப்படை உரிமைகளை மறுக்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது என திருமதி இந்திரா கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

''மக்கள் எதைவிரும்புகிறார்கள் என்ற முடிவு தெரியவே இடைத்தேர்தல்நடைபெறவிருக்கிறது. எனது கட்சி 520 தொகுதிகளிலும் போட்டியிடும். எனது கட்சி தேர்தலுக்கு முன்னர் பதவியிலிருந்து விலகவேண்டுமென்று கோரப்படுகிறது ஆனால் அதற்கு எதுவித காரணமுமில்லை' என்றும் சொன்னார். இந்திரா மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில்.

சிறுபான்மை இனத்தவரின் நியாயபூர்வமான கோரிக்கைகள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார்.

## 'வடக்கில்கூட்டுறவுசங்கங்கள் சீராகவே இயங்குகின்றன'

—செனட்டர் நடராசா

கொழும்பு, செவ்.

''வடபகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் சீரானமுறையிலேயே இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகையால், அரசாங்கத்தின் புனரமைப்புத்திட்டம் வடபகுதியில் சிறப்பாக இயங்கும் கூட்டுறவுச் சங்க அமைப்பைப் பாதித்துவிடும். தென்னிலங்கையில்! கூட்டுறவுச் சங்க அமைப்புமுறைசீரானமுறையில் இல்லாததால், வடபகுதியில் பயிற்சிபெற்றவர்களை அங்குநியமனம் வழங்கி சீராக்கலாம்''

இவ்வாறு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் திரு சு. நடராசா இன்று செனட்சபையில்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்

கூட்டுறவுச் சங்க புனரமைப்பு மசோதா மீது அவர் பேசுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களை அரசாங்கமும் நியமிக்கமுற்பட்டால் வடபகுதியில் இப்போதுள்ள கட்டுக்கோப்பான அமைப்பு சீரழிந்து விடுமென்றும் அவர் எச்சரித்தார்.

# மீன்பிடித்தொழில் அபிவிருத்தி சபைவடக்கில் நிறுவப்பட்டது

## மீனவர் பிரச்னையை தீர்க்க 27 சங்கங்கள் அமைக்கப்படும்

நல்லூர், புதன்

வட இலங்கையில் மீன் பிடித் தொழிலில் அபிவிருத்தி செய்யும் நோக்கோடு மீன்பிடி அமைச்சரின் உத்தரவுப் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் மீன்பிடித் தொழில் அபிவிருத்திச் சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

யாழ் அரசாங்கசெயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. விமால் அமரசேகராவின் தலைமையில் இச்சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு தி முருகேசம்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா பொ இரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி திரு ஆ தியாகராசா, என்பனவற்றை பதிவு செய்வதில் கூட்டுறவு இலாகா போதிய கவனம் எடுப்பதில்லை யென்றும் மீன்பிடிச் சங்கங்களை உடனடியாக பதிவு[illegible]ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தினர். பருத்தித்துறை [illegible] துரைரத்தினம் [illegible] பொழுது கூட்டுறவு இலாகா[illegible] வும் மீன்பிடி இலாகாவும் [illegible]க்குமானால் 1972ம் ஆண்டு மீன் தட்டுப்பாடு ஏற்படுமென்றும் சென்னர்.

நியமன எம். பி. திரு. எம் சி சுப்பிரமணியம்பேசுகையில் மீன்பிடிச் சங்[illegible]கள் நிறுவப்படும்போது சிறுபான்மைத் தமிழர் [illegible]வண்ணம் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவே[illegible]

யாழ். மாநகரசபை

## வரவு-செலவுத்திட்டம் எதிர்ப்பின்றிநிறைவேறியது

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 71-ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் எதிர்ப்பு எதுவுமின்றி நிறைவேறியது.

மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், முதலில் வரவு செலவுத் திட்டம் கமிட்டி நிலையில் ஆராயப்பட்டு திருத்தங்கள் செய்யப்பட்டு அத்திருத்தங்களுடன் நிறைவேறியது.

உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் கமிட்டி நிலையில் ஆராயப்பட்ட போது செய்யப்பட்ட திருத்தங்களுடன் வரவுசெலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதென பிரேரித்தார் திரு ரி கே இராசரத்தினம் இதனை அனுவதித்தார்.

சுமார் இரண்டு மணி நேரம் கமிட்டி நிலையில் ஆராயப்பட்டது. ஒரு கட்டத்தில் இரு உறுப்பினர்களுக்கிடையே மோதல் ஏற்பட நேர்ந்தபோது மற்றும் உறுப்பினர்கள் தலையிட்டு அதனை தவிர்த்துக்கொண்டனர்.

## இராஜசூரியர் சபையில் மௌனமாக இருந்தார்

முன்னைய கல்வி அமைச்சின் ஊழல்

## ஹசன் கமிட்டியின் 2-வது இடைக்கால அறிக்கை

### இன்று சமர்ப்பிக்கப்படும்

காலி, புதன்

முன்னைய அரசாங்க ஆட்சியின்போது கல்வியமைச்சில் நடந்த ஊழல்கள் சம்பந்தமாக விசாரணைசெய்துவரும் ஹசன்கமிட்டி தனது 2வது இடைக்கால அறிக்கையை இன்று கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்கும்.

முதல் தர ஆசிரிய நியமனங்கள் சம்பந்தமானதாகவே இந்த அறிக்கை இருக்கும். இவ்வாறு நியமிக்கப்பட்ட அநேக ஆசிரியர்களது விபரங்களையும் இவ்வறிக்கை கொண்டிருக்கும். கல்வி இலாகாவில் ஏற்பட்ட ஊழல் சம்பந்தமாக கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்தினல் ஹசன் கமிட்டி நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

காலி வழக்கறிஞர் ஜனப் எம் எஸ் ஏ ஹசன் தலைமையிலான இக்கமிட்டியில் திரு எல் ஆர் பெரேரா, திரு எல் ஆரியவன்ஸா, திரு ஏ வைத்திலிங்கம், திரு ஜி எல் டி சில்வா, திரு வி ஆர் கருணரத்தின, ஏ பி விஜயத்திலக்கா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## தேர்தல் ஏற்பாடு

புதுடில்லி, டிச. 29

இந்திய ஆட்சிமன்ற (லோக் சபை) இடைத்தேர்தல் ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்குத் தேர்தல் அதிகாரிகள் வருகிற திங்கட்கிழமை புதுடில்லியில் கூடவிருக்கிருர்கள். தலைமைத் தேர்தல் அதிகாரி திரு எஸ். பி. சென்வர்மா இந்தக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார்.

இடைத் தேர்தலை சீராக நடாத்துவது பற்றி ஒழுங்கீனங்கள் ஏற்படாதவாறு முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் இந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் ஆராயவிருக்கிருர்கள்.

## தீவுப்பகுதியில் நடமாடும் காரியாதிகாரி கந்தோர்

நல்லூர், புதன்

தீவுப்பகுதி காரியாதிகாரி

## சென்னை இசைவிழாவில் யாழ். கணேசன் தவில்

தமிழ் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் தமிழ்இசை விழாவில் பிரபல நாதஸ்வர வித்துவான்களான 'தில்லானு மோகனம்பாள்' புகழ் நலம்தானு...... சேதுராமன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் கமிட்டி அதனை தவிர்த்துக்கொண்டனர்.

கப்பட்டது. இக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு தி. முருகேசம்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா பொ இரத்தினம், வட்டுக்கோட்டை எம். பி திரு ஆ தியாகராசா, கோப்பாய் எம் பி திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை, உடுவில் எம் பி திரு வி, தர்மலிங்கம், பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம், நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியம் உட்பட காரியாதிகாரிகளும் மீன்பிடிச் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் திரு. விமால் அமரசேகரா தலைமை வகித்து பேசும் போது மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதின் மூலம் இந் நாட்டின் பொருள் வளத்தை பெருக்கலாம் என்றும், மீனவர்களின் தேவைகளை இத்தகைய சபையின் மூலம் அபிவிருத்தி செய்யலாமென்றும் கூறினார்.

ஊர்காவற்றுறை எம் பி. திரு கா பொ இரத்தினம் பேசும்போது மீன்பிடிச் சங்கங்கள் நெசவு நிலையங்கள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வும் வற்புறுத்தினார். பருத்தித்துறை எம் பி திரு க. துரைரத்தினம் பேசும் பொழுது கூட்டுறவு இலாகாவும் மீன்பிடி இலாகாவும் இணைந்து செயல்பட வேண்டுமென்றும் ஒவ்வொரு மாகாணத்திலும் அந்த மாகாணங்களிலே ஏற்படக்கூடிய மீனவர் பிரச்னையை தீர்க்கக் கூடிய எல்லா மீன்பிடி இலாகா அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் தற்போது உள்ள நிலைமை நீடிக்கையில் மீன்பிடிச் சங்கங்கள் நிறுவப்படும்போது சிறுபான்மைத் தமிழர் பாதிக்கப்படாவண்ணம் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருபத்தியேழு மீன்பிடிச்சங்கங்களை நிறுவி அதன் மூலம் மீனவர் பிரச்னைகளைத் தீர்ப்பதென்று கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# இராஜசூரியர் சபையில் மௌனமாக இருந்தார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்பாணம் மாநகர சபை வரவு செலவுத் திட்ட விவாதக்கூட்டத்தின் போது திரு ஏ ஜி இராஜசூரியர் 1-ம் வட்டாரத்திற்குரிய ஆசனத்தில் மௌனமாக இருந்தார்.

பிற்பகல் 3-15 மணிக்கே திரு இராஜசூரியர் தமது ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார். மேயர் திரு. துரைராஜா தமது ஆசனத்தில் வந்து அமர்ந்தவுடன் சபையை நோக்கிக் கண்ணோட்டம் விட்டார், திரு இராஜசூரியரைப் பார்த்ததும் மேயருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

'மிஸ்டர் இராஜசூரியர்' என்றார் மேயர். 'இருக்கிறேன் சார்' என்றார் திரு இராஜசூரியர். உடனேசில அங்கத்தவர்கள் வழக்கம் போல் அவர் இருக்கட்டும் என்றார்கள். 'ஒற்றுமையாக ஒத்துழைப்போம் சார்' என்று திரு இராஜசூரியர் மேயரைப் பார்த்துக் கூறினார்.

'கூட்டத்தை நடத்துவோம்' என்று கூறியமேயர் கூட்டத்தை ஆரம்பித்தார். கூட்டம் முடியும்வரை திரு இராஜசூரியர் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மௌனமாக இருந்தார்.

---

## குறைந்த விலையில் கனிமரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய விஸ்தரிப்பு நிலையங்களில் நல்ல இன பழமரச்கன்றுகள் குறைந்த விலையில் விநியோசிக்கப்பட்டு வருவதாக விவசாயப் பகுதியினர் அறிவித்துள்ளனர். கிளிநொச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள விவசாயப் பண்ணைகளிலும் வடபகுதியில் உள்ள சகல விவசாய விஸ்தரிப்பு நிலையங்களிலும் இக்கன்றுகளை வாங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மா, பலா, மாதுளை, தோடை எலுமிச்சை ஆகிய கனி மரக்கன்றுகளே விற்பனை செய்யப் படுவதாகவும், மிகக் குறைந்த தொகைக் கன்றுகளே மீதமிருப்பதாகவும் விவசாய விஸ்தரிப்பு ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

# வட பகுதியில் கிராம அபிவிருத்தி திட்டங்கள்

அராலி, செவ்வாய்

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வடபகுதியில் மல்லாகம் கிராமச்சங்கபரப்பிலடங்கிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு விரைவில் ஆங்கு அபிவிருத்தி வேலைகள் தொடங்கவிருக்கின்றன. அரசாங்கத்தின் இன்னோர் திட்டமான விரைவான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடுவில் தொகுதியில் சண்டிலிப்பாயும், காங்கேசன்துறைத் தொகுதியில் பெரியவிளானும் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வலிமேற்கு காரியாதிகாரிப் பிரிவிலடங்கிய மற்றைய தொகுதியான வட்டுக்கோட்டையில் விரைவில் ஒரு கிராமம் அத்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் சிபார்சுடன் தெரியப்படலாமென அறியக்கிடக்கிறது.

தீவுப்பகுதியில் அடங்கிய தோப்புக்காடு தீவுப்பகுதி காரியாதிகாரியினால் அபிவிருத்திக்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் கிராம மக்களின் ஒத்துழைப்போடு கிராமத்திலுள்ள வழிபாதைகள், குடிநீர்க்கிணறுகள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் புதிதாயமைக்கவும், பழைய பாதைகள் திருத்தங்கள் செய்வதற்கும் சிரமதான வேலைகளை கிராமஅபிவிருத்திப் பகுதியினர் பொறுப்பேற்றுச் செய்வார்கள்.

---

## உத்தியோகஸ்தர்

சுழிபுரம், செவ்வாய்

இலங்கையில் கூட்டுறவுப் பகுதியினரால் அங்கீகாரம் செய்யப்பட்ட தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயநிதிச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சங்கத் தலைவர் திரு. க. தம்பையா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. இ' தம்பையா, உபதலைவர் திரு. கி. பரமலிங்கம், காரியதரிசி: திரு. சி சண்முகநாதன், உபகாரியதரிசி: திரு. இ. ஆறுமுகம், தனாதிகாரி: திரு பொ ஆறுமுகம்.

## நடமாடும் காரியாதிகாரி கந்தோர்

நல்லூர், புதன்

தீவுப்பகுதி காரியாதிகாரி ஒவ்வொரு கிராமத்திலும் மாதத்தில் ஒரு நாள் அலுவலகம் நடத்தி மக்களின் குறைகளை கேட்டறிவார்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து தீவுப்பகுதி மக்கள் காரியாதிகாரியைச் சந்திப்பதில் ஏற்படும் கஷ்டங்களை எடுத்து விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து தீவுப்பகுதி காரியாதிகாரி ஒவ்வொரு மாதமும் ஆறு தினங்களை அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, எழுவைதீவு ஆகிய இடங்களிலுள்ள உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களுக்குச் சென்று அங்கு பொதுமக்களைச் சந்தித்து அவர்களது குறைபாடுகளை அறிந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

......

## தம்பிரான் சுவாமிகளுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம். புதன்

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, சென்னை தமிழிசைச் சங்கம் ஆகியவற்றின் அழைப்பைஏற்று தமிழ்நாடு சென்று அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றி இன்று ஈழம் திரும்பும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான்சுவாமிகளுக்கு இன்று மாலை 4மணியளவில் பலாலி விமான நிலையத்தில் பொது மக்களால் வரவேற்பு அளிக்கப்படும்.

மாலை 5-30 மணிக்குநல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பொது வரவேற்பு விழா ஒன்று அறநெறிக் காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெறும். இவ்வைபவத்தில் யாழ் மாநகரசபை உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம். திரு. க. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவர்.



தமிழ் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் தமிழ்இசை விழாவில் பிரபல நாதஸ்வர வித்துவான்களான 'தில்லானா மோகனும்பாள்' புகழ் நலம்தானா...... சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்களுக்கு ஈழத்தவரான தவில வித்துவான் கரவேகசுர ஞானகேசரி யாழ். நாச்சிமார் கோவிலடி கே. கணேசன் தவில் வாசிக்கவிருக்கிறார்.

தமிழ் இசைச் சங்கத்தின் விசேஷ அழைப்பை ஏற்று இவர் அங்கு செல்கிறார்.

ஜனவரி 3-ம் திகதி இரவு 9-30 மணிக்கு சேதுராமன் சகோதரர்களுக்கு இவர் தவில் வாசிக்கும் நிகழ்ச்சி இடம் பெறும். சென்றாண்டு திருப்பதியில் தியாகராஜர் இசைவிழாவிலும். கருவூரில் நடந்ததிருவாவடுதுறை ரி. ராஜரத்தினம் பிள்ளையின் நினைவுவிழாவிலும் கணேசன் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

### தேசீய வாதிகளுக்கு மரணதண்டனை

# கருணைகாட்டுமாறு ஜூரிகள் சபை கோரிக்கை

மாட்றிட், டிச. 29

கல்பெயினில் இராணுவ மன்றத்தால் மரணதண்டனை அளிக்கப்பட்ட 6 தேசியவாதிகள் மீதும் கருணை காட்டுமாறு சர்வதேச நீதிமன்ற யூரிகள் சபை ஸ்பெயின் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது உலகில் மனித உரிமைக்கு இதனால் பங்கம் ஏற்பட்டுவிடலாமெனவும்ஆகையால் அவர்கள் மீது கருணைகட்டுமாறு உலக திருச்சபை கேட்டுள்ளது. இந்த மரணதண்டனை அநீதியின் கொடுங்கோண்மையையே காட்டுகிறது என சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் கருத்துக் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையிலிருக்கும் இக்கைதிகள் இரகசியமாக வெளியிட்ட அறிக்கையில் இவ்விதமான தண்டனைகளினால் தங்களுடைய போராட்டத்தை நசிக்கிவிடமுடியாதென்றும். தொடர்ந்தும் தங்கள் போராட்டம் நடைபெறுமென்றும் இவ்விதமான பாசிசக் குற்றத்தைத் தடுக்க உலகநாடுகள் முன்வரவேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரைச்சி கிராமசபை தேர்தல் முடிவுகள்

கிளிநொச்சி, செவ்வாய்

இன்று நடைபெற்ற கிளிநொச்சி-கரைச்சி கிராம சபைத்தேர்தலில் முன்னாள் தலைவர் திரு ரி. செல்வத்துரை வெற்றிபெற்றார். ஏனைய வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:-

1-ம் வடடாரம்- திரு செ சந்திரலிங்கம்.

2-ம் வட்டாரம்- திரு சி பொன்னுத்துரை.

3-ம் வட்டாரம்- திரு கா மார்க்கண்டு.

4-ம் வட்டாரம்- திரு கா செல்லையா.

5-ம் வட்டாரம்- திரு இ வேலுப்பிள்ளை.

6-ம் வட்டாரம்- திரு ரி செல்லத்துரை. (முன்னாள் தலைவர்)

7-ம் வட்டாரம் திரு இ சண்முகலிங்கம்.

8-ம் வட்டாரம்- திரு மு ஐயம்பிள்ளை. (போட்டியின்றித் தெரிவு)

9-ம் வட்டாரம்- திரு வ சரவணமுத்து.

10-ம் வட்டாரம்- திரு கா விநாயகமூர்த்தி.

11-ம் வட்டாரம்- திரு பொ வேலாயுதம்.

12-ம் வட்டாரம்- திரு சி சிதம்பரநாதர்.

13-ம் வட்டாரம்- திரு எம் செல்வரத்தினம்.

14-ம் வட்டாரம்- திரு சி சிதம்பரப்பிள்ளை.

15-ம் வட்டாரம்- திரு த நடராசா.

16-ம்வட்டாரம்- திரு எஸ் பேராயிரசிங்கம்.

17-ம் வட்டாரம்- திரு த ஜோன்ராசா.

18-ம் வட்டாரம்- திரு சி குணரத்தினம்.

19-ம் வட்டாரம்- திரு செ கந்தசாமி.

20-ம் வட்டாரம்- திரு பிரான்ஸிஸ் சேவியர்.

21-ம் வட்டாரம்- திரு வீ கந்தையா.

# "நாட்டின் சகல பகுதியிலும் சேவையாற்ற முன்வரவேண்டும்"

— வட்டு எம். பி.

சுழிபுரம், செவ்.

யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தஅரசாங்கஉத்தியோகஸ்தர்கள் எல்லோரும் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள்ளேயே சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு இலங்கையின் சகல பகுதிகளிலும் சேவையாற்ற முன்வர வேண்டும் எல்லோரும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் சேவைசெய்யநினைப்பதால்பெரும் சிக்கல்கள் ஏற்படவுள்ளன.

தொல்புரம் கிராமமுன்னேற்றச் சங்கத்தினரால் தொல்புரம் அரசினர் வைத்தியசாலை அதிகாரியாக பணியாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு, என். ரி. மூர்த்திக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவில்கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவுக்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. அ வைத்திலிங்கம் தலைமை வகித்தார் திரு ஆ. தியாகராசா மேலும் பேசுகையில் கூறியதாவது: அரசாங்கம் சுகாதார சம்பந்தமான விடயங்களில் பல உதவிகளைச் செய்ய திட்டம் வகுத்துள்ளது. இத் தொகுதியிலுள்ள சங்கானை, வட்டுக்கோட்டை கொட்டைக்காடு, தொல்புரம், காரைநகர்வைத்தியசாலைகள் இதனால் பெரும் பயன் அடையவுள்ளன.

முன்னாள் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது கடவுளுக்கு அடுத்தவன் எமது சமயக்கருத்தின்படி வைத்தியனவான். இன்று இடமாற்றம் பெற்றுச் செல்லும் வைத்திய அதிகாரி என். ரி மூர்த்தி தொல்புரம் வைத்தியசாலையின் வளர்ச்சியோடு மக்கள் நெஞ்சத்தில் குடிகொண்டவராவார் எல்லோரையும் இனியராகவும் நல்லுதவியைச் செய்த சேவையாளராகவும் விளங்கிய மூர்த்தியின் பணியால் தான் இவ் வைத்தியசாலை இந்நிலைமைக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

திரு அ. தையல்பாகர் அரும் முயற்சியால் திறக்கப்பட்ட வைத்தியசாலை இன்று தினமும் ஏராளமான நோயாளர்கள்பயன் பெறும் இடமாக விளங்குகின்றது இவற்றுக்கெல்லாம் வைத்திய அதிகாரியாக பணியாற்றிய என். ரி. மூர்த்தியே காரணமாகும்.

திருவாளர்கள் அ. சின்னத்துரை ஞா. யோசேப்பு, அ. மயில்வாகனம் ஜேம். மயில்வாகனம் சு, கந்தசுவாமி பண்டிதர் ப. இராசகுரு புலவர் நா. சிவபாதசுந்தரம் உட்பட மற்றும்பலர் பேசினர்.

### விஞ்ஞான முறை

# பயிர்ச் செய்கையை தீவிரமாக்க நடவடிக்கை

அராலி, செவ்வாய்

அரசாங்க கமநலச் சேவை திணைக்களம் மாவட்டங்கள் தோறும் பயிர்ச்செய்கைக் குழுக்களின்சம்மேளனங்களை பதிவு செய்து வருகிறது. ஒரு மாவட்டத்தில் ஒரு சம்மேளனம் மட்டுமேபதிவு செய்யப்படும்.

இச்சம்மேளனத்தின் முக்கிய நோக்கங்கள் பயிர்ச் செய்கைக்குழுக்களை ஊக்குவித்தல், வழி காட்டல், தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவியளித்தல், விஞ்ஞான முறைப் பயிர்ச் செய்கையை தீவிரமாக பரப்புவதற்கு நடவடிக்கைகளெடுத்தல்' கால்நடை வர்க்கங்களின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகளெடுத்தல் போன்றனவாம்.

இவ்விதமான சமேளனமொன்று யாழ். மாவட்ட பயிர்ச்செய்கைக் குழுக்களின் சம்மேளனம் என்ற பெயருடன் அண்மையில் கமநலச்சேவை ஆணையாளரால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

5 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், வருமானவரிக் கந்தோருக்கு ஏற்றுக்கொள்ளும் வகையில் கணக்கு தமிழில் எழுதத் தெரிந்த கணக்கப்பிள்ளை ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். எஸ். சுப்பிரமணியம் அன் கோ 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2612

ஸ்ரோர்க்கீப்பரும், காசாளரும்:

இரசாயனத்திலும், பௌதிகத்திலும் விசேட சித்தி உட்பட க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்த ஸ்ரோர்கீப்பரும், கணிதம், அல்லது எண் கணிதத்தில் விசேட சித்தி உட்பட க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்த காசாளரும் தேவை. பிணை: ஸ்ரோர்கீப்பருக்கு ரூபா 4000 காணியாகவும், ரூபா 1000 காசாகவும். காசாளருக்கு: ரூபா 1000 காசாக. மனுச்செய்ய வேண்டிய கடைசித் திகதி 10-1-71. காரியதரிசி, வல்லை கூட்டுறவு வைத்தியசாலை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை. 2610

### விற்பனைக்கு

ரைகர் கப் 1 சிறீ மோட்டார் சைக்கிள் உன்னதமான நிலையில், பல எக்ஸ்ராஸ் உடன் விற்பனைக்குள்ளது. 291, நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் பார்வையிடலாம். 2611

### கல்வி

G. C. E (O. L) வகுப்புகளுக்கு பௌதிகம், பிரயோககணிதம், தூயகணிதம், ஆகியவற்றிற்கு டியூஷன் வகுப்புக்கள் 15-1-71 முதல் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு அண்மையில் ஆரம்பமாகும். எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். குமார், 269, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2613

யாழ் நுண்கலைத் தொழிற் பாடசாலை, 426, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். பின்வரும் பாடங்கள் கற்பதற்குப் பிரவேச விண்ணப்பங்கள் 5-1-71 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். 1. மோட்டார் இயந்திரவியல் (1 வருடம்) மோட்டார் கார், ஸ்கூட்டர், டீசல் எஞ்சின், வாட்டர் பம்புகளில் செய்முறையிலும், படி முறையிலும் விசேட பயிற்சி அளிக்கப்படும். பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு "டிப்ளோமா" (Diploma) அளிக்கப்படும். 2. தையல் "டிப்ளோமா" (1 வருடம்). சகல விபரங்களுக்கும் காரியாலயத்தில் நேரடியாகவோ, அல்லது 10 சத முத்திரையும் விலாசமுமுடைய தபாலுறை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். சிவ. உ. சோமசேகரம் (கௌரவ தலைவர்) இ. சபாலிங்கம் (கௌரவ காரியதரிசி). 2588

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

### விற்பனைக்கு

உஷா தையல் மெசின் (Stream lined) புதியது விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மனேச்சர், பெருமாள் கோயில், யாழ்ப்பாணம். 2600


## இன்றைய பலன்

மார்கழி மாதம் 15-ம் திகதி [30-12-70]

மேஷம்- வாகனம் செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். தனி வழிப்பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

ரிஷபம்- கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும். தாய் வழிச் செய்தியும் கிடைக்கும். கவிஞர்கள் ஆதரவு தருவர்.

மிதுனம்- தூர தேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடம் ஏற்படலாம்.

கடகம்- பசுமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும். இன்று சுபதினம்

சிம்மம்-சிந்தையில் குழப்ப நிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம்

கன்னி- புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும். ஏழைகளுக்கு இரங்குவதில் முன் நிற்பீர்கள்.

துலாம்- தொழில் துறையில் புதிய வெற்றி கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவைத் தாராளமாகப் பெறுவீர்கள்.

விருச்சிகம்- முதல்விட்டுச் செய்யும் தொழில் அதிக லாபத்தைத் தரலாம். வணிகத்துறையில் அதிக முன்னேற்றங் காணப்படுகின்றது

தனுசு- அற்ப விடயத்திற்கும் ஆத்திரமடைவீர். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்.

மகரம்- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம். வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு.

கும்பம் அவசரப் போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்வீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும்;

மீனம்- எண்ணம் போல் வாழ்வு மலரும். சமூகத்தில் மதிப்பு உயரும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு;

## கல்விக்கூடம் நிறுவி சேவையாற்றிய பெரியார்



மறைந்த வதிரி நாகலிங்க உடையார் கனகசிங்கம் ஒரு சமூகத் தொண்டன் மக்கள் நலன் கருதிச் சேவை செய்தவர்.

இவர் இடாம்பீக வாழ்வை உதறிச் சாதாரண மக்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ள வேண்டுமென்ற தணியாத அபிலாசையுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டார். கட்டைவேலிக் கிராமச் சபையினதும், நீதிமன்றத்தினதும் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். இப்பதவி அவர் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகாலம் பலரதுபாராட்டுக்கும் உரித்தாகி வகித்தவர் இவரது சேவையில் கரவெட்டி, துன்னாலை, அல்வாய், திக்கம் ஆகியபகுதிகள் பயன்பெற்றுள்ளன.

பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய தொகுதிகளை உள்ளடக்கிய வடமராட்சிப் பகுதிமக்களின் கல்வித் தேவைகளைப்பூர்த்தி செய்யவும், சைவம் தமிழ் ஆகியவற்றின் அபிவிருத்தியை நிலைநாட்டவும் கருதி 1920 ஆம் ஆண்டுவடமராட்சிமத்திய பாடசாலையை நிறுவினார். மறைந்த திரு குரேசெற் போன்றகல்விமான்கள் விட்ட இடத்திலிருந்துதமது புனித பணியை ஆரம்பித்தார். இன்னும் சாதாரண பொதுமக்கள் அவர் நிறுவிய கலைக்கூடத்தை, அவரது இன்னொரு பெயரான 'செல்லையா' என்னும் பெயரைப் பொருத்தி 'செல்லையா பாடசாலை' என அழைத்து வருகின்றனர். மறையும் வரை வதிரி கனகசிங்கப்பிள்ளையார் ஆலயம், உல்லியன் ஒல்லை அம்மன் ஆலயம், செட்டிகுடியிருப்பு வைரவர் ஆலயம் ஆகிய மதஸ்தாபனங்களின் ஆதீன கர்த்தாவாகவும் பெரும் பணியாற்றியுள்ளார்.

— வ. மகாலிங்கம்

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன் கொழும்புத்துறை மன்றுளாடும் விநாயகமூர்த்திப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் திருவெம்பாவைப் பூசையின்பின் ஜனவரி மாதம் 1-ம், 2-ம், 3-ம் திகதிகளில் திரு. சுப்பிரமணியம் தன் 'மாணிக்கவாசக சுவாமி' என்னும் பொருள் [illegible]

## கொட்டடி நமசிவாய வித்தியாசாலை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயவித்தியாசாலையை மகாவித்தியாலயம்ஆக உயர்த்தவேண்டுமென்ற தீர்மானம் ஒன்று கல்வி அமைச்சருக்கும் யாழ்ப்பாண ஆட்சி மன்ற உறுப்பினருக்கும், நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியத்துக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் கொட்டடி முத்தமிழ் மன்றத்தினர் நடாத்திய கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

இக் கூட்டத்துக்கு திரு. ஏ. எஸ். குணரத்தினம் தலைமை வகித்தார்.

# செய்திச் சுருக்கம்

### புதிய மாவு ஆலைகள்

அரசாங்கம் திருகோணமலையிலும் காலியிலும் இரு புதிய மாவு ஆலைகளை விரைவில் நிறுவவிருக்கிறது. வீட்டுத் தேவைக்கும் பாண் தயாரிப்பதற்கும் தேவையான மாவை இந்த ஆலைகள் அரைத்து விநியோகம் செய்ய உள்ளன. வெளிநாட்டுப் பொருளாதார தொழில் நுட்ப உதவிகளோடு இந்த இரு ஆலைகளும் நிறுவப்படவுள்ளன.

### பென்சில்கள் அஸ்பெஸ்டஸுக்கு விலைக் கட்டுப்பாடு

இவ்வாரம் முதல் ஆஸ்பெஸ்டஸ், பென்சில் ஆகியவற்றை விலைக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக் கைத் தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

### வியாபாரிகள் கோரிக்கை

இலங்கைச் சில்லறை வியாபாரிகள் சம்மேளனம் கூட்டுறவுக் கடைகளுக்கு வழங்கப்படுவது போன்று நல்ல தரமுள்ள பொருள்களை அரசு தனியார் துறையின் சில்லறை வியாபாரிகளுக்கும் வழங்க வேண்டும் என வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தினவைக் கோரியுள்ளது.

### ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

கல்பிட்டி ஆஸ்பத்திரியில் ஒரு பெண் 3 குழந்தைகளை ஒரே சூலில் பெற்றெடுத்தாள். கல்பிட்டியிலுள்ள ஆனைவாசல் என்ற இடத்தைச் சேர்ந்த திருமதி. நடேசன் என்னும் இப் பெண்மணியும் அவரது குழந்தைகளும் நலமாய் உள்ளனர்.

### 40,000 பேருக்கு பயிற்சி

40 000 இளைஞர்களுக்கு இளைஞர் சேவைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தேசிய பாதுகாப்பு பயிற்சியளிக்க அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 4முகாம்கள் நிறுவி அவற்றில் இவ் விளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

### 36 பண்டகசாலைகள்

நாட்டின் பல பகுதிகளிலும் 36 பண்டகசாலைகளை நிறுவ அடுத்தாண்டு முதல் செயல்படவிருக்கும் அரசாங்க வர்த்தக கூட்டுஸ்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இப் பண்டகசாலைகளில் முதலாவது பண்டகசாலை இன்று புத்தளத்தில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தினவால் திறந்துவைக்கப் படுகிறது.

### தபால்மூலம் பயிற்சி

நாட்டின் பல பாகங்களிலுள்ள பாடசாலைகளிலும் கடமைபுரியும் ஆசிரியர்களில் பலர் பயிற்றப்படாத ஆசிரியர்களாகவுள்ளனர். இவர்களுக்குத் தபால்மூலம் பயிற்சியளிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வியமைச்சு தயாரித்துள்ள 1ம் வருட பயிற்சித் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். பட்டதாரிகளுக்கு 2 வருடப் பயிற்சியும் ஏனையோருக்கு 3வருட பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

### தமிழர்கள்

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையில் தனிச்சிங்களத்தில் நிர்வாகம் நடாத்தப்படுவதால் கல்லோயாத்திட்டத்தில் உள்ள எண்ணற்ற தமிழ் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் எனப் புகார் கூறப்படுகிறது.

## மனோகரா வெற்றி

பருத்தித்துறை, செவ் யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் உதைபந்தாட்டக் கோஷ்டி 'பீ' பிரிவுக்கோஷ்டிக்கும் அல்வாய் மனோகரா கோஷ்டிக்குமிடையில்நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், மனோகரா கோஷ்டி 3—1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. த. இரத்தினசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

கிறீன்பீல்ட் 'ஏ' பிரிவுக்கும், வாதிரி பொமேஸ் கோஷ்டிக்கும் நடந்தபோட்டியில் பொமேஸ் 4—0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. எஸ். சிவலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர்—லட்சுமி ஜெயலலிதா—அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

ராஜா - யாழ். நகர்

தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

# ஏசுநாதர்-தமிழ்

இப்படத்துடன்

அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்

## வெளிவந்து விட்டது!

க. பொ. த. (சா. நி.) மாணக்கர்கள் ஆவலோடு எதிர்பார்த்த

# இளநிலைப் பிரயோக கணிதம்

ஆக்கியோன்: ம. கங்காதரம் B.Sc (Lond.)

விற்பனை உரிமை:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

2707

# நாளையோடு எமது

மலிவு விற்பனை முடிவடைகிறது

உங்கள் புத்தாண்டு ஜவுளித்தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

# டயருமஸ்

54 - 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# சேற்றிலும் சக்தியிலும் காலை முதல் மாலை வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்துடன்

## அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை

எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்

அத்துடன்

பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் 40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

---

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்

ராஜன், லட்சுமி, நிர்மலா, ரவிச்சந்திரன் நடித்த

## ஏன்?

அத்துடன்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு தமிழில் எல்லாக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகின்றது.

---

கெப்பிட்டல் பிளாஸா (இன்று மட்டும்) திரைகளிலும்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, போயா நாட்கள் காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ, ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த

சத்யா மூவிஸ்

## கண்ணன் என் காதலன்

அத்துடன்

வெலிங்டனில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில் காண்பிக்கப்படும்

---

வெடுத்தாலும் ஆதிரம் ஏற்படும்.

மீனம்- எண்ணம் போல் வாழ்வு மலரும். சமூகத்தில் மதிப்பு உயரும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 30—12—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வளை, 7-45 சித்திரம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4 25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 பொலிஸ் நிகழ்ச்சி, 6-15 வயலின், 6-30 விவசாய நிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 யாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்தித்தொகுப்பு.

---

### வெஸ்லிசினிமா

சாவிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த

## நம் நாடு

---

**MANOHARA**

Jaffna

Daily

4-30, 7-15 & 9-45 p.m.

Public holidays 10-30 a m

Clint Eastwood

Lee Marvin

in

PAINT YOUR WAGON

(Scope-Color)

---

### ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

கே பி சுந்தராம்பாள் நடித்த

## ஔவையார்

---

லாலும் விநாயகமூர்த்திப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் திருவெம்பாவைப் பூசையின்பின் ஜனவரி மாதம் 1-ம், 2-ம், 3-ம் திகதிகளில் திரு ஈழவேந்தன் 'மாணிக்கவாசக சுவாமிகள்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.



### பண்பாளர் டாக்டர் மூர்த்தி

வட்டக்கச்சியில் கரைச்சி கிராமசபையின் இலவச வைத்தியசாலையில் ஆரம்பகால முதலாகச் சேவை செய்த வைத்தியகலாநிதி சு விநாயகமூர்த்தி நினைவு தினம் இன்று சாவகச்சேரியில் கொண்டாடப்படுகிறது

பல வருடங்களாக ஒரே வைத்தியசாலையில் தொடர்ந்து சேவை செய்தமையால் டாக்டர் மூர்த்தி ஒவ்வொருவருடைய உடல்நிலையையும் அவரவர் சரித்திரத்தையும் நன்கறிந்திருந்தார். மக்களின் அபார நம்பிக்கையைப் பெற்றிருந்த இவர் இயல்பாகவே இரத்தினச்சுருக்கமாகவே பேசுவார் இவருடைய வைத்தியப் புலமை குலமுறையாகவும் நிறைய வந்தெய்தி முதிர்ச்சியடைந்திருந்தது

யாழ்ப்பாணம் டாக்டர் சண்முகரத்தினத்தாரின் பண்புகளைப் போற்றிவந்த டாக்டர் மூர்த்தி தன்னுடைய தொழில் முறைக்கு அவரையே முன்மாதிரியாகக் கொண்டவர்.

சிறந்த ஜீவகாருண்யம் நிறைந்த பண்பாளராகத் திகழ்ந்த டாக்டர் மூர்த்தியின் அகால மறைவு வைத்திய நண்பர்களுக்கும் அவர் சேவைபுரிந்த பிரதேசத்திற்கும் பேரிழப்பாகும்

—டாக்டர் வி எஸ் மாசிலாமணி

---

**REGAL**

Jaffna

Daily 4-45, 7 9-45 p. m.

Poya days 4 shows

Vanessa Redgrave

in

THE LOVES OF ISADORA

(Adults)

---

## சுறுப்பும் சக்தியும் காலை முதல் மாலை வரை அயராது உழைக்கும் உங்களுக்கு இதோ!


கணப்பொழுதில் செயலாற்றும்,

புது முறை அசல்



# வின்சென்ட்ஸ்

(இளஞ் சிவப்பு) வில்லைகள்



விரிவான விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள உடனுக்குடன் மூவ் வழியில் செயலாற்றும் புது முறை வின்சென்ட் ஏஎஸ்ஸி இளஞ் சிவப்பு வில்லைகள் தலையிடி, நோவு, வலி, காய்ச்சல் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு உடனடியாகவும் நிலையாகவும் நிவாரணந் தந்து, ஊக்கமும் உற்சாகமும் உடல் நலமும் உடையவர்களான உணர்வை மீட்டுத் தருகின்றன.

வலி, காய்ச்சல் என்பன நிலைத்து நின்றால் உங்கள் வைத்தியரைக் காணுங்கள்.

உட்கொள்ளுங்கள்

மூவ் வழிச் செயற்பாடுடைய

அசல் (ரோஜாவர்ணம்)

**வின்சென்ட்ஸ்**

ஏ.எஸ்.சீ

வில்லைகள்



மூவ் வழிச் செயற்பாடுடைய வின்செண்ட் இளஞ்சிவப்பு வில்லைகள் விரைவில் செயலாற்றுவன; பாதுகாப்பானவை; நிச்சய குணமளிப்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து அந்நியர் வெளியேற வேண்டும்"

கராச்சி, டிச. 29

"இனி மீது போர்த்துக்கல் நடத்திய ஆக்கிரமிப்பு கண்டிக்கப்பட வேண்டியது இனியிலிருந்து போர்த்துக்கல் வாபஸாக வேண்டும். இஸ்ரேல் தான் ஆக்கிரமித்த அரபுப் பகுதியிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்".

இவ்வாறு நேற்று கராச்சியில் மூன்றுநாட்கள் நடந்து முடிந்த முஸ்லீம் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

கராச்சியில் முஸ்லீம் வெளிநாட்டமைச்சர்களின் மூன்றுநாள் மகாநாடு நேற்று முடிவுற்றது இனி நாட்டின் மீது போர்த்துக்கல் ஊடுருவல் செய்ததை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டித்தது. இனியில் சட்டரீதியான அரசு நிலைக்கவும் மக்கள் அமைதியுடன் வாழவும் உடனடியாகப் போர்த்துக்கல் தனது ஆக்கிரமிப்பிலிருந்து பின்வாங்க வேண்டும் எனக் கோரும் தீர்மானமும் இஸ்ரேல் ஆக்கிரமித்த அரபுப் பிரதேசங்களிலிருந்து ஐ. நா. தீர்மானத்திற்கிணங்க முற்றாக வெளியேற வேண்டுமென்ற தீர்மானமும் இம் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன.

இந்த மகாநாட்டில் கொள்கை அளவில் உடன்பாடு ஏற்பட்டதாக இந்தோனேசிய வெளிநாட்டமைச்சர் திரு ஆதம்மாலிக் ஜகார்த்தாவிற்குப் புறப்படுவதற்கு முன் கராச்சியில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முஸ்லீம் நாடுகளிடையே வர்த்தக கலாச்சார பரிவர்த்தனை செய்வதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான மத்திய நிலையத்தை அமைப்பதே இம் மாநாட்டின் நோக்கமாகும் இம் மாநாட்டின் மத்திய நிலையம் கட்டாவில் ஒரு வருடத்திற்கு இயங்கும் அதன் பின்பு ஜெருசலேத்தில் இயங்கும் முஸ்லீம் வெளி நாட்டமைச்சர்களின் மூன்றுவது மகாநாடு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஆப்கானிஸ்தானிலுள்ள காபூலில் கூடும் என அவர் தெரிவித்தார்.

## இஸ்ரேல் தீர்மானத்திற்கு ஐ. அ. கு. வரவேற்பு

கெய்ரோ, டிச 29

ஐக்கியநாடுகள் சபையின் மேற்காசிய சமாதானத் தூதர் டாக்டர் குணர் ஜாரிங்கின் தலைமையில் நடைபெறும் மேற்காசிய சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்து கொள்வதென்ற இஸ்ரேலின் தீர்மானத்தை ஐக்கிய அரபுக் குடியரசு முன்னெச்சரிக்கையுடன் வரவேற்றுள்ளது.

இத்தகவலை கெய்ரோ ஐக்கிய அரபுக் குடியரசுப் பேச்சாளர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இஸ்ரேலின் இந்தத் தீர்மானத்தை ஒரு விளையாட்டான விஷயமாக கருதிவிட முடியாது. ஐ நா. மேற்காசிய சமாதானத் தூதர் டாக்டர் ஜாரிங்கின் தலைமையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதுமட்டும் முக்கியமல்ல. சமாதானத்திற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொன்னார்.

இதேவேளையில் இஸ்ரேல் சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்து கொள்வதென்ற தீர்மானத்தை அமெரிக்கா முழுமனதுடன் வரவேற்றுள்ளது. சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து ஒரு சுமுகமான நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்பதே அமெரிக்காவின் விருப்பமென அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்சன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தீர்மானத்தை ஐ. நா, தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வரவேற்றுள்ளார்.

## "புதிய ஆண்டில்

## பிரேஸிலில் கடத்தல் அச்சம்

பிரேசிலியா-(பிரேசில்) டிசம்பர் 29

பிரேசில் நாட்டிலிருந்து சுவிற்சர்லாந்து தூதுவர் திரு. பூகரைக் கடத்தியதாகக் கருதப்படும் தீவிர வாதிகளுக்கும் பிரேசில் அரசாங்கத்துக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையைதம்பக்கம் வலிமைப்படுத்துவதற்காக தீவிர வாதிகள் மற்றும் மொரு வரைக் கடத்தலாமென பிரேசில் பொலிசார் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இப்படி இன்னு மொருவரைக் கடத்துவதினால் அரசாங்கம் தன் கொள்கையை சிறிது விட்டுக் கொடுக்கலாமெனத் தீவிர வாதிகள் கருதுவதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

## இடமாற்றம்

இமையாணன், செவ்.

கடந்த 7 வருடங்களாக தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆசிரியாரகக் கடமையாற்றிய திரு, ஆ. டே. போல் ஜனவரி முதல் திகதியிலிருந்து பதில் தலைமை யாசிரியராக இமையாணன் அரசினர் த. க. பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

0 0 0

யாழ்ப்பாணம், புதன்

கடந்த நான்கு வருடகாலமாகத் திருநெல்வேலியில் விவசாய விஸ்தரிப்பு இலாகாவின் 'சினைப்படுத்தும்' பகுதியில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய திரு. ஆர். திருநாவுக்கரசு இன்று மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்றார். இவருடைய சேவையைப் பாராட்டி, விழாவொன்றும் நடாத்தப்பட்டது.

0 0 0

கிளிநொச்சி, செவ்வாய்

கொழும்பு கோட்டை பொலிஸ்நிலையத்தில் கடமை புரிந்த திரு. எம். சிவரத்தினம் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்று வருகிறார்.

0 0 0

கிளிநொச்சி, செவ்வாய்

## வர்த்தக நிபுணர்கள் இலவச ஆலோசனை

லண்டன், டிச. 29

பிரிட்டிஷ் வர்த்தக நிபுணர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வர்த்தக நிர்வாகத் துறையில் ஆலோசனை அளிக்கும் திட்டம் ஒன்று பிரிட்டனில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

இத்திட்டத்தின்பிரகாரம் அனுபவம் மிக்க பிரிட்டிஷ் வர்த்தகர்கள் வெளிநாடுகளுக்கு குறுகியகால விஜயங்களை மேற்கொண்டு உள்ளூர் வர்த்தக ஸ்தாபனங்களுக்குத் தொழில் ஆலோசனை கூறுவார்கள் பின்தங்கிய நாடுகளிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு இலவசமான முறையில் இந்த 'ஆலோசனை சேவை' அளிக்கப்படும்.

## யாழ்முனீஸ்வரன் கோவில் திருவெம்பாவை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் ஆலய திருவெம்பாவை பூசை ஆராதனை ஜனவரி முதலாம் திகதி காலை ஆரம்பமாகும். தொடர்ந்து பஜனையும் பக்திப்பாடலும் காலை எட்டு மணிவரை நடைபெறும். 9 தினங்கள் பூசை நடைபெற்று பத்தாவது தினம் அதிகாலை 4-30 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்தைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிரதிதினமும் மாலைஐந்து மணிக்கு உருத்திராபிடேகமும் நடைபெறும் திருவெம்பாவை பூசைகளை முன்னிட்டு வெள்ளிக்கிழமைகளில் பி. ப 4-30 மணிக்கு நடைபெறும். பூசை இரவு 7 மணிக்கே நடைபெறுமென்றும், திருவெம்பாவை காலத்தில் கோவிலின் பேரால் உதவி கோரி இல்லங்களுக்கு வருபவர்களுக்கு எதுவும் கொடுக்கப்படாதென்றும் கோவில் அதிபர் கேட்டுள்ளார்.

## விருந்துபசாரம்

...அரால், செவ்வாய்

... பகுதியில் ... யா...ம் செய்யும் அமைச்...

## குழந்தைகளுக்கு விசேஷ டைப்ரைட்டர்

ஹைடல்பேர்க், டிச. 29

பள்ளிக்குப்போய் படிக்கத் தொடங்குமுன்னரே, குழந்தைகள் 'டைப்ரைட்டரில்' அடிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். இச்சோதனை ஜெர்மன் கூட்டாட்சிக்குடியரசில் ஹைடல்பேர்க் நகரில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்துடன் படிக்கவும் கூட்டல் கணக்குச் செய்யவும், இக்குழந்தைகளுக்குச் சொல்லித்தரப்படுகிறது. சிறுகுச்சிகளைக் கொண்டு கூட்டல் கணக்குகள் கற்றுத்தரப் படுகின்றன. இக்குழந்தைகளுக்கென, 5 விரல்களைக் கொண்டு மட்டும் அடிப்பதற்குரியவிசேஷ'டைப்ரைட்டர்' தயாரிக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு பொத்தானிலும் ஒரு குறிப்பிட்ட வர்ணமும், அதேவர்ணம் கை நகங்களிலும்பூசப்பட்டிருக்கும். இந்த டைப் ரைட்டர், வேறு இயந்திரத்துடன் இணைக்கப் பட்டிருக்கும். சொற்களுக்கு மாறுபட்ட தவறான பொத்தானை குழந்தை அழுத்தினாலும், அது அச்சாவதில்லை இவ்வித அச்சுகள், இயந்திரத்திலுள்ள திரையிலும் தெளிவாகத் தெரிகின்றன. எனவேதட்டெழுத்தில் அடிக்கும்போதேதிரையிலும்தெரிகிற சொற்களைக் குழந்தைகள் நன்கு படித்துப் புரிந்து கொள்கின்றனர்.

## ஆலோசகர்களே காரணம்

பத்தேகம, செவ்.

'ஆயுர்வேத வைத்தியஅபிவிருத்தியின்மைக்கு மேற்கத்திய வைத்திய முறைகளைக் கையாளுபவர்களை ஆலோசகர்களாக நியமிப்பதனாலேயே ஆயுர்வேத வைத்தியமுறை இலங்கையில் நல்ல வளர்ச்சியடையாதுகாணப்படுகிறது.

வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் உதவியமைச்சர் திரு பி. ஏச். பண்டாரா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மருதானையில் நடைபெற்ற அகில இலங்கை ஆயுர்வேத காங்கிரஸின் 42-வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றுகையிலேயே உதவியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இம்மகாநாடு ஆயுர்வேத சக்கரவர்த்தி டாக்டர் கே. டி.பி. பியசேன தலைமையில் நடைபெற்றது.

## ஸ்பெயினில் 6 தீவிர வாதிகளுக்கு மரணதண்டனை

மாட்றிட, டிச. 29

ஸ்பெயின் இராணுவநீதி மன்றம் 6 தீவிர வாதிகளுக்கு இன்று மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இரண்டு வருடங்களுக்கு முன் சென் செபஸ்தியான் பொலிஸ் அதிகாரியைக் கடத்திக் கொலை செய்ததாக 16 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப் பட்டு வந்தனர். இந்த விசாரணை கடந்த மூன்று வாரகாலமாக நடைபெற்றது. விசாரனை முடிவில் ஆறு தீவிரவாதிகளுக்கு மரணதண்டனையும், 9 பேருக்கு நீண்டகால சிறைத் தண்டனையும். ஒருவருக்கு சாதாரண சிறைத் தண்டனையும் அளித்துத் தீர்ப்புக் கூறியது.

இந்தத் தீவிர வாதிகளின் இயக்கந்தான் ஸ்பெயினில் மேற்கு ஜேர்மனி அதிகாரி ஒருவரைக் கடத்திய இயக்கமெனக் கருதப்படுகிறது.

## மார்கழிபஜனையில் சிங்களவர்

நாவலப்பிட்டி, செவ்:

மார்கழி மாதம் தேவர்கள் மாதம். தேவர்கள் மார்கழியில் பிரமமுகூர்த்தத்தில் பூவுலகிற்கு வந்து வழிபாடாற்றுகின்றார்கள்: அவர்களை வரவேற்கவே முற்றத்தை சுத்தப்படுத்தி கோலங்களிட்டு அழகுபடுத்துகிறோம். அத்தகைய மாதத்தில் திருப்பாவை திருவெம்பாவை பாடல்களைக் கூடிப் பாடுவது ஆத்மீக வளர்ச்சி பெறவும் தேவர்களின் அநுக்கிரகம் கிட்டவும் வழிகோலும்.

இவ்வாறு ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா கொத்மலை உனுகல்லேயா தோட்ட உத்தியோகஸ்தர் திரு. பொன்னையா ஜெயரத்தினம் தலைமையில் இடம்பெற்ற மார்கழி பஜனை வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழர் சிங்களவர் என்ற பேதமின்றி தோட்டத் தொழிலாளர்கள் இவ் வைபவத்தில் கலந்து பஜனை பாடினர்.

## சென்னை இசைவிழா

சென்னை டிசம்பர், 30

இன்றைய நிகழ்ச்சி: மியூசிக் அக்கடமி சார்பில் அகடமி மண்டபத்தில்:-

பி. ப 1 30: நிர்மலா ஸ்ரீநிவாசன்-பாட்டு, பி ப. 3.00: பி வி ராமனும், பி. வி. லக்ஷ்மணனும்- பாட்டு, பி ப 5. 30: எம். பாலமுரளி கிருஷ்ணா-பாட்டு, இரவு 9.30: சாத்தூர் ஏ. ஜி சுப்பிரமணியம்-பாட்டு,

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் ஆதரவின் கீழ் வாணிமகாலில்:

பி ப.: சீதாலட்சுமி கணபதி- பாட்டு, இரவு: 6.00 குமாரிஹேமமாலினி- பரத நாட்டியமும் அபிநயமும், இரவு: 9.30 மாயூரம் எஸ். ராஜம்-பாட்டு,

தமிழ் இசைச்சங்கத்தின் ஆதரவின்கீழ் ராஜா அண்ணாமலை மன்றத்தில்:

இரவு6.00: மதுரைசோமசுந்தரம்- பாட்டு, இரவு 9.30: சின்னமௌலானா-நாதஸ்வரம்.

(இமையாணன்-நிரு)

## சென்னை இசை விழாவில் இவர்

யாழ்ப்பாணம், புதன்

இணுவிலைச் சேர்ந்த திரு. ராதாகிருஷ்ணன் தற்போது சென்னையில் நடைபெறும் தமிழ் இசைச் சங்க இசை விழாவில் வயலின் வாசிப்பதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்திலிருந்து ஈழம் வந்து கச்சேரிகள் செய்த சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை, திருப்புகழ் மணி இராசசேகரம் ஆகியோர்க்கு பக்கவாத்தியம் செய்து பாராட்டுப் பெற்ற இவர் தவில் வித்துவான் திரு: தெட்சணாமூர்த்தியின் நெருங்கிய உறவினராவர்.

## கி. ச. உறுப்பினர் பதவி இழந்தார்

சாய்ந்தமருது. செவ்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்புக் கிராம சபையினர் 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. பொன்னையா சின்னத்தம்பி கிராம சபையின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்து செல்லாததையடுத்து அங்கத்தவர் பதவியிலிருந்தும் விலக்கப்பட்டுள்ளார்

இவ் வட்டாரத்துக்கான இடைத்தேர்தல் அடுத்தாண்டு ஜனவரி இறுதிப் பகுதியில் நடைபெறும் எனத் தெரிகிறது.

## "ஹஜ்யாத்திரைக்கு வயதெல்லை இஸ்லாத்திற்கு முரணானது"

நாவலப்பிட்டி, செவ்வாய்

'நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் ஹஜ் யாத்திரை செய்யமுடியும் என்ற நிபந்தனை இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணானதொரு நிபந்தனையாகும். தொழுகை, நோன்பு, சக்காத்து போன்ற முக்கிய கடமைகளுக்குத் தேவையான காலம், நேரம், வயது, ஒழுங்குவசதி அனைத்தும் குர் ஆன் வாயிலாக இஸ்லாமியர்கள் ஏற்றுக் கொண்டதொன்றாகும். இதில் திருத்தமோ மாற்றமோ செய்வதற்கு எவருக்கும் உரிமையில்லை.''

இவ்வாறு நாவலப்பிட்டி நகரபள்ளிவாசலில் இஸ்லாமிய பிரசார இயக்கம் நடாத்திய கூட்டமொன்றில் உரையாற்றுகையில் ஜனாப் உவைஸ் குபுறு அப்துல் ஹமித் ஆலிம் கூறினார். ஹஜ் யாத்திரைக்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்த ஹஜ் கமிட்டித் தலைவர் கல்வி மந்திரி கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூதுக்கும் சம்பந்தப் பட்ட உறுப்பினர்களுக்கும் நாவலப்பிட்டி முஸ்லிம்கள் நன்றி செலுத்துவதுடன் ஹஜ்யாத்திரை வயது எல்லையைத் தளர்த்தும்படியும் இஸ்லாத்தின் பெயரால் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு கல்வியமைச்சருக்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு ஜனாப் ஏ. எம். இஸதீன் தலைமை தாங்கினார்.

"லீலா" மேல் அன்பு செலுத்த செலவு ரூபா 2-50 வரவு அமோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ஐ நா. மேற்காசிய சமாதானத் தூதர் டாக்டர் ஜாரிங்கின் தலைமையில் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துவதுமம்

இஸ்ரேலின் தீர்மானத்தை ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வரவேற்றுள்ளார்.

"புதிய ஆண்டில்

# லட்சம் பேருக்கு வேலை கிடைப்பது நிச்சயம்"

— சுகாதார அமைச்சர்

நாவலப்பிட்டி, செவ்

"பிறக்கும் புத்தாண்டில் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் செயல்பட உள்ளது. பேச்சளவில் இல்லாமல் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதே மக்கள் அரசின் இலட்சியமாகும்,"

இவ்வாறு நாவலப்பிட்டி அரசாங்க ஆஸ்பத்திரியின் சத்திரசிகிச்சைக்கூடம், குடுமார் வார்ட் ஆகியவற்றைத் திறந்து வைத்துப் பேசிய சுகாதார அமைச்சர் டபிள்யூ. பி. ஜி. ஆரியதாச குறிப்பிட்டார்.

'அரசாங்கத்தின் முன்னேற்றம் கருதி சோஷலிச வழியில் செல்கையில் ஏற்படும் ஒரு சில கஷ்டங்களை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என அமைச்சர் சொன்னார்.

நாவலப்பிட்டி கம்பளை வீதியிலிருந்து ஊர்வலமாக கண்டிய நடனங்களுடன் அழைத்துச் செல்லப்பட்ட அமைச்சரும் மற்றும் எம் பி களும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் விசேட பூசையிலும் பங்குபற்றினர்

நாவலப்பிட்டி எம். பி. திரு எம் எஸ் அலுத்கமகே. மஸ்கெலியா எம் பி திரு காமினி ஆரியதிலக, கம்பளை எம் பி திரு டி எம் ஜயரத்ன. ரத்தட்ட எம் பி திரு எஸ் பி யாலேகம ஆகியோரும் உரையாற்றினர்.

## விபத்தில் சாரதி மரணம்

அனுராதபுரம், செவ்வாய்

அனுராதபுரம் மதவாச்சி வீதியில் உள்ள சங்கிலி கடைருவ என்னும் இடத்தில் இ. போ. ச: பஸ் ஒன்றும் லொறியும் மோதியதால் லொறிச் சாரதி ஸ்தலத்திலேயே மரணமானார். 15 பிரயாணிகள் கடுங்காயமடைந்தனர் இவர்களை விட சிறுகாயமடைந்த சிலர் மதவாச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்தில் கடுமையாகக் காயமடைந்த 15 பேரும் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப்பட்டனர்.

## விளையாட்டு விழாவில் இரு அமைச்சர்கள்

யாழ்ப்பாணம். செவ்வாய்

அண்மையில் அனுராதபுரத்தில் அனுராதபுர உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 'இலங்கை புகையிலைக்கொம்பனி' யாரின் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட நொக்கவுட் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு விழாவில் மின்சார நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயகா, விளையாட்டு அமைச்சர் திரு கே, பி( ரத்னயகா ஆகியோர் கலந்து உரையாற்றினார்கள்

வெற்றிபெற்றி 'ரேஜன்ஸ்' விளையாட்டுக்கோஷ்டிக்கும் இரண்டாவதுஇடத்தைப் பெற்ற அனுராதபுரம் மத்திய கல்லூரிக் கோஷ்டிக்கும் திருமதி ரஞ்சனி சேனநாயகா பரிசில்கள் வழங்கினர்.

## முக்கிய இடத்தில் முத்திரை தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்: புதன்

யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள உதவித் தபால் நிலயத்தில் முத்திரைத் தட்டுப்பாடு நிரந்தரமாக ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நீதிமன்றங்கள், யாழ்ப்பாணம் மாநகரசபை. காணிக் கந்தோர் போன்ற முக்கிய நிலயங்களிருப்பதால் முத்திரையின் தேவை அதிகமாகவுள்ளதாயினும்: குறிப்பிட்ட கந்தோரில் முத்திரை பெறுவதில் பொதுமக்கள் கிரமப்படவேண்டியிருக்கிறதாம்,

பொலிஸ் நிலயத்தில் கடமை புரிந்த திரு. எம். சிவரத்தினம் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் கிளிநொச்சிப் பொலிஸ் நிலயத்துக்கு இடமாற்றம் பெற்று வருகிறார்.

0 0 0

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சிப் பிரிவில் பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் சி. சண்முகநாதன் அடுத்த ஆண்டு முதல் ரத்தோட்டைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். ரத்தோட்டையில் இவர் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுவார்.

இவரது இடமாற்றத்தையிட்டு கிளிநொச்சி சுகாதார வைத்தியாதிகாரி திரு, எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் பாராட்டு வைபவம் ஒன்றும் நடைபெற்றது.

0 0 0

தாவடி, செவ்வாய்

யாழ்ப்பாணம் வடபெரும்பாகத் தபால் அத்தியட்சகர் கந்தோரில் கடமையாற்றிய, திருவாளர்கள் சு. ஆறுமுகசாமி, ரி. செல்லத்துரை, கே. மகாலிங்கம், ஆர். சண்முகலிங்கம், சிதம்பரநாதன், குருசிங்கம் ஆகியோர் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு அவர்களுக்குக் கந்தோர் ஊழியர்களால், பிரிவுபசாரமும் தேநீர் விருந்துபசாரமொன்றும் அக்கிக்கப்பட்டது.

0 0 0

காலி, செவ்வாய்

பொலிஸ் சார்ஜன்டுகள் திரு. எஸ். திருச்சிற்றம்பலம், திரு. எம். மன்சூரியர், திரு. கே. இரத்தினசபாபதி ஆகியோர் 1-1-71 தொடக்கம் இடமாற்றலாகிச் செல்கின்றனர்.

திரு. எஸ். திருச்சிற்றம்பலம் கோப்பாய்க்கும், திரு எம் மன்சூரியர் மட்டக்களப்புக்கும், திரு. கே, இரத்தினசபாபதி நெடுந்தீவுக்கும் பொலிஸ் சார்ஜன்டுகளாக இடமாற்றலாகிச் செல்கின்றனர்.

0 0 0

பேசாலை, செவ்வாய்

பேசாலைக் கிராம சபைச் செயலாளர் திரு. க. குமாரசுவாமி ஜனவரிமுதல் திகதியிலிருந்து மானிப்பாய்பட்டின சபை செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர்கடந்த 20 ஆண்டுகளாக உள்ளூராட்சி சேவை அதிகாரசபையின் கீழ் பலபதவிகளை வகித்து வந்துள்ளார்.

திரு. குமாரசுவாமியின் சேவைநலத்தைப் பாராட்டிய தீர்மானமொன்று இம் மாதம் 23-ம் திகதி பேசாலைக் கிராமசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

0 0 0

அராலி, செவ்வாய்

வலி-மேற்கு தீவுப்பகுதி கிராம நீதிமன்ற சேவையில் பொது குமாஸ்தாசேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த திரு. எஸ். கந்தசாமி ஜனவரிமுதலாம் திகதி தொடக்கம் புத்தளம் பிஸ்கால் அலுவலகத்துக்கு குமாஸ்தாவாக மாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

கிராம நீதிமன்றங்களின் நீதிபதி திரு. ஐ. கிருபாகரனும் மற்றும் உத்தியோகத்தர்களும் திரு. கந்தசாமிக்கு பிரியாவிடை உபசாரக் கூட்டமொன்று சங்கானை கிராம நீதிமன்ற அலுவலகத்தில் நடத்தினர்கள்.

றும் கோவில் அதிபர் கேட்டுள்ளார்.

## விருந்துபசாரம்

அராலி, செவ்வாய்

[illegible] பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும் அமைச்சர்கள் திரு ரி. பி. இலங்கரத்தினவுக்கும், திருமதி. தாமரகுமாரி இலங்கரத்தினவுக்கும், தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கும், திரு வி. இராசசுந்தரம் தமது இல்லத்தில் ஓர் இராப்போசன விருந்து நடத்தினர். இவ் விருந்தில் நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பொலிஸ் சேவைக்கு

## மேலும் 5000 பேர்

கோட்டை, செவ்.

நாட்டின் பொலிஸ் சேவையைப் பலப்படுத்துவதற்கு இவ்வருடம் மேலும் 5000 பேர் பொலிஸ் சேவைக்குத் தெரிவுசெய்யப்படுவர்

இவ்வாறு வருடா வருடம் 1000 பேர் திரட்டப்பட்டுப் பொலிஸ் சேவையின் பலம் அதிகரிக்கப்பட விருக்கிறத.

## 81,811 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை

கோட்டை, செவ்

1964-ம் ஆண்டில் செய்யப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் 81,811 பேர் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றுள்ளனர். இவர்களில் 19,912 பேர் ஏற்கனவே நாடு திரும்பியுள்ளனர்.

டி. பி. பியசேன தலைமையில் நடைபெற்றது.

மிலாளர்கள் இவ் வைபவத்தில் கலந்து பஜனை பாடினர்.

நடாத்திய கூட்டமொன்றில் உரையாற்றுகையில் ஜனப்

எம். இஸதீன் தலைமை தாங்கினர்.


# "லீலா" மேல் அன்பு செலுத்த

செலவு ரூபா 2-50 வரவு அமோகம்

அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்ற செயலாளர் கலாநிதி பிதா தனிநாயகம் அடிகள்

அனைத்துலக - சகல சமூக, சமய, சமரச, சன்மார்க்க சித்திரங்கள் 551 அடங்கிய

## லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரைப்

பார்த்து மகிழ்ந்து எம்மை ஊக்குவிக்கும் நோக்கமாக எழுதி அனுப்பித் தந்த கடிதம் இதோ! "லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் நாட்காட்டியைப் போன்றதொன்றை உலகில் வேறெந்த நாட்டிலும் நான் கண்டதில்லை" ... ... "இந்த நாட்காட்டியை ஒரு நூல்நிலயம் என்று கூறினாலும் மிகையாகாது".. பிதா தனிநாயகம் அடிகள்.

வாசியுங்கள்

கொழும்பு-4.

27.2.70.

திரு. ச த. சின்னத்துரை,
சமாதான நீதவான்,
உரிமையாளர்,
நியூ லீலா அச்சகம்,
33 செல் செபஸ்ரியன் மேடு,
கொழும்பு-12.



நியூ லீலா அச்சகத்திலிருந்து வெளியிடப்பட்ட லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் நாட்காட்டியைப் போன்றதொன்றை உலகின் வேறெந்த நாட்டிலும் நான் கண்டதில்லை ஒவ்வொரு நாளும் படிப்போரது உள்ளத்தைக் கவரக் கூடும் சிந்தனையும், வரலாற்று அடிப்படையிலான உண்மையும், நிகழ்ச்சியும், பெரியோரின் நினைவும் அழகிய முறையிலும் சுருக்கமாகவும் அச்சிடப்பட்டுள்ளன எல்லா சமயத்தவர்க்கும், எல்லா இனத்தாருக்கும், எல்லா நாட்டாருக்கும் பயன்படும் முறையில் தொகுக்கப் பெற்ற இந்த நாட்காட்டியை ஒரு நூல் நிலயம் என்று கூறினும் மிகையாகாது. "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வள்ளுவரின் கருத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த தொகை நூலை ஒவ்வொரு நாளும் பார்ப்பதாலும் படிப்பதாலும், நம் தமிழ் பேசும் மக்களிடம் நற்பண்பும் பரந்த மனப் பான்மையும் உயர்ந்த [illegible] வேரூன்றி வளரும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றி சிந்தித்தது தமிழ் பேசும் மக்கள் புத்துணர்ச்சியும், புத்தாற்றலும் பெற்று வாழ்வார்கள்

லீலா பஞ்சாங்க நாட்குறிப்பு, தமிழ் மகள் ஈழத்திலும், உலகத்திலும் ஆற்றிய அரும் சேவைகளை வற்புறுத்தி ஆராய்ச்சி அடிப்படையாக ஆக்கப் பெற்ற நாட்குறிப்பு. இவ்விரு துறைகளிலும் 25 ஆண்டுகளாக ஈடுபட்டு வெற்றி பெற்ற உயர் திரு. ச. த. சின்னத்துரை அவர்கட்கு நம் மதிப்பும், நன்றியும் உரித்தாகுக.

சே. தனிநாயகம்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்,

லீலா டயறிகள், தமிழ், ஆங்கில, சிங்கள, டயறி திறுசுகள் 45.

இவ்வெடுத்தக் இரு புதுவித தமிழ் டயறிகளை வெளியிட்டுள்ளோம்.

உங்கள் அருகாமையில் உள்ள வியாபார அன்பர்களிடம் கேட்டு வாங்கிப் பார்க்கவும் அல்லது எமக்கு எழுதவும் அல்லது நேரில் கேட்கவும்.

ஏக விநியோகஸ்தர்கள்: லீலா ஸ்ரோர்ஸ், 249, செறாறிஸ் ஸ்றீட், புறக்கோட்டை.

பதிப்பாளர்: நியூ லீலா அச்சகம், 33, செ்ன். செபஸ்தியன் மேடு, கொழும்பு.

இந்து முஸ்லிம், கிறிஸ்தவ சமய சார்புள்ள பத்திரிகைகளும் அறிஞர்களும் போற்றிப் புகழ்கின்றன.

சைவப் பெரியார்

சேர். கந்தையா வைத்தியநாதன் போன்றோரும், மணிவிளக்கு (தமிழ்நாடு), கண்ணன் (தமிழ்நாடு) அல் இஸ்லாம், (இலங்கை) வீரகேசரி, தினகரன், ஈழநாடு, சுதந்திரன், சத்தியவேத பாதுகாவலன் கதம்பம், தினபதி, சிந்தாமணி, கலைச்செல்வி முதலிய பத்திரிகைகளும் பாராட்டிப் போற்றுகின்றன

வடமாகாணத்தில் தொகையாக கிடைக்குமிடம் | செ. ஆ. செ. அன் கோ | 110 ஆஸ்பத்திரி வீதி, (பெரியகடை) யாழ்ப்பாணம்

# "லீலா" உலக புதினங்களிலொன்று "லீலா"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கடவுளை வழிபடும் முறையைச் சனங்களுக்குப் போதிப்பதால் நாட்டில் அறியாமை நீங்கும்; பாவம் தேயும், புண்ணியம் வளரும்,

—ஆறுமுகநாவலர்

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889

[illegible] சாதாரண வருஷம் மார்கழி மாதம் 15-ந் திகதி (30-12-70)

## கடற்றொழில் அபிவிருத்தி

வட இலங்கையில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் கடற்றொழில் அபிவிருத்திச்சபையொன்று நிறுவப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடந்த ஒரு மகாநாட்டில் தான் இக்கடற்றொழில் அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டிருக்கிறது. கடற்றொழில் அபிவிருத்தியில் அமைச்சும் அரசாங்கமும் அதிக அக்கறை கொண்டு நடவடிக்கை எடுக்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவு. கடல்படு திரவியங்கள் நிறைய இருந்தும் நாம் அதைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. நமது நாட்டு மக்களுக்குத் தேவையான மீன்கூட நம்மைச் சூழ்ந்துள்ள கடலிலிருந்து பெற முடியாதிருக்கிறோம். நமது கடற் பிராந்தியத்திலேயே அந்நியர் வந்து மீன்பிடித்து அவற்றை டப்பாக்களில் அடைத்து நமக்கே விற்பனை செய்யும் நிலை இன்றும்கூட மாறவில்லையென்றேசொல்ல வேண்டும். நமது நாட்டிலும் மீன்களை டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலைகள் சில நிறுவப்பட்டன. இவை 'சுண்டக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்' என்ற பழமொழிக் கதையாகவே முடிந்திருக்கிறது.

கடலிலிருந்து மீன்களுடன் வேறு பல உணவுப் பொருள்களையும் நாட்டுக்கு வருமானத்தைத் தேடித்தரக்கூடிய பல பொருள்களையும் பெறமுடியுமென்று வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துத்தெரிவித்துள்ளனர் நமது தீவைப் பொறுத்தவரையில் அதிக கஷ்டமில்லாமல் பெறக்கூடிய மீன்களையாவது நமது நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்து அந்நிய செலாவணியைச் சம்பாதிப்பதற்குப் பயன்படுத்தலாம்.

கிடைக்கிறதென்பதையுமே இது நிரூபிக்கிறது. 19 4-ல் ஆண்டில் வீசிய கோரப் புயலுக்கு மயிலிட்டிக்கரையிலுள்ள மீனவர்கள் பலர் பலியான போதிலும் அவர்களின் குடும்பங்களுக்குச் சரியான முறையில் புனர்வாழ்வளிக்க வகைசெய்யாத போதிலும் அந்த அனுபவத்தைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் பாதுகாப்பளிப்பதற்கான 'இன்சூரன்ஸ்' போன்ற திட்டங்கள் கொண்டுவரப்படாத போதிலும் வடபகுதியில் கடற்றொழில் அழிந்துவிடவில்லை

கடற்றொழிலாளருக்குப் போதிய பாதுகாப்புத்திட்டங்கள் வகுப்பதன் மூலமும் கடற்றொழிலில் ஜப்பான் மற்றும் பல நாடுகள் பின்பற்றும் நவீன முறைகளில் பயிற்சியளிப்பதன் மூலமும் வடபகுதியில் கடற்றொழிலை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம். இதனால் வடபகுதி மட்டுமல்ல நாட்டின் இதர பகுதிகளிலும் மக்கள் மீன் உணவில் சுய தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளவும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கவும் வழி பிறக்குமென்று நிச்சயமாக நம்பலாம்.

கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கு வடபகுதியில் மட்டுமல்ல நாட்டின் இதர பல பகுதிகளிலும் இது போன்ற அபிவிருத்திச் சபைகள் நிறுவப்படுவதற்கான முயற்சிகளை கடற்றொழில் அமைச்சர் மேற்கொண்டிருக்கிறார். இந்தச்சபைகள் கடற்றொழிலாளருக்குப் போதிய பாதுகாப்பளிக்கும் திட்டங்களையும் கடற்றொழிலில் நவீன உத்திகளைக் கையாளவேண்டிய திட்டங்களையும் கொண்டுவந்து செயல்படுத்துவதற்கு வேண்டிய பணிகளைச் செய்யவேண்டும்.

கடற்றொழில் அபிவிருத்திச் சபைகள் மட்டுமல்லாது கடல்படு திரவியங்களை எப்

## மின்சாரத்திட்டம்

# "சொந்த நிதியிலிருந்தே நாலரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது"

## வரவு செலவுத்திட்டவிவாதத்தில் யாழ். மேயர் நிகழ்த்திய உரை

யாழ்ப்பாணம், புதன் 'பஸ் நிலையக் காணியை எடுப்பதற்கான காணிக் கொள்வனவு கட்டளை ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் உரியகாலத்தில், உள்ளூராட்சி அமைச்சர் தலையிட்டமையால் இக்காணி எடுத்தல் தடைசெய்யப்பட்டிருக்கிறதென்பதுடன் தற்போதைக்கு அவ்விஷய பின்போடவும் பட்டுள்ளது. வாடிவீட்டிற்கான வாடகை சகல நிலுவைகளுடனும், எமக்குச் செலுத்தப்பட வேண்டுமென்றும் அமைச்சர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 71-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டவிவாதத்தின் போது மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா மேற்கண்டவாறு கூறினார்.

மேயர் திரு. துரைராஜா மேலும் கூறியதாவது:-

பாரிய வேலைகள் சிலவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்தபின்னரும் ஒரு சிறு மேலதிகத்துடன் வரவு-செலவுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தல் சாத்தியப்பட்டது.

மிகவும் தேவைப்படுவதான திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஒருமின்சார திட்டத்திற்கு எமது சொந்தநிதிகளில் இருந்தே நாலரை 'இலட்சத்திற்கான ஒரு தொகை வேறாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது பிரதானமாக ஆளித் துணைப் பொறிகளைப் பொருத்துவதற்கும், மற்றும் ஏனைய திருத்தங்களை மேற்கொள்வதற்குமே விஸ்தரிப்புக்களுக்கும் ரூ. 40,000க்கான ஒரு தொகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அலுவலக கட்டிடங்களின் விஸ்தரிப்புக்களுக்கும் கிட்டத்தட்ட ஒரு லட்சத்திற்கான ஒரு தொகையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யான் முதல்வராக இருந்த பொழுது 1963ல்இத்திட்டம்தொடங்கப்பெற்றது ஆயினும் ஏதோ ஒரு காரணத்தால், மன்றமும், ஏன் சிறப்பு ஆணையாளர்களும் கூட இவ்விஸ்தரிப்புக்களை மேற்கொள்ளத் துர

கிடைக்காவிட்டால் எந்த ஒரு முதல்வர்தானும் நல்ல முறையில் பணியாற்ற இயலாது. இந் நிலுவைகள் எமது பணப் பேழைக்குள் வரக்கூடுமாகில், மிகவும் பயனுள்ள அரிய ஆக்க வேலைகள் பலதை நிறைவேற்றலாம். மின்சாரத்திற்கான விகிதங்களும் உயர்த்தப்படல் வேண்டுமென்பதுடன், ஒரு அலகின் விலையை 10 சதத்திலிருந்து 12 சதமாக உயர்த்துதலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதாகவிருக்கையில் இது விடயமாக திட்டமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாதுள்ளது. ஒரு வகையான சரிவு விகிதக் கட்டணங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மின் பொருட்களது விலை வியத்தகு அளவில் விரைவாக ஏறியிருக்கிறதென்பதோடு, உதாரணத்துக்கு முன்னர் ரூ 500/- ஆகவிருந்த ஒரு அந்தர் செப்புக் கம்பி தற்பொழுது ரூ. 2000/- விலைக்கும் கிடைக்கக் கூடியதாகவும் இல்லை. தொழில் கூலியும் கணிசமான அளவு அதிகரித்துள்ள தென்பதுடன், பொது மக்களிடம் அறவிடப்படும் கட்டணங்களும் ஒரே அளவில் உயர்த்தப்படாவிடின் சம்பவிக்கக்கூடிய நட்டங்களைத் தவிர்க்காது சிறப்பான சேவை எதையும் ஆற்றுதல் மிகவும் சாத்திய மற்றதாகிவிடும்.

கடந்து செல்கையில் மின்சார விநியோகம் சம்பந்தமான சரியான நிலையை வரியிறுப்பாளர்களுக்குத் தெரிவிக்க இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன் [illegible]யோகம் மிகவும் அதிருப்தி தருவதாயுள்ளது. ஆயினும், அதற்கானகுற்றத்தை எம்மீது [illegible] முடியாதென்பதை [illegible] ஆற்ற [illegible]ப்பதாகக் கொள்ள முடி

கங்கள் கிடைப்பதாயில்லை. இன்னமும் புடக்குகையில் ஆரம்பநிலையில் இருக்கக்கூடிய மஸ்கோலியத் திட்டம் குறித்து அதிகம் சிலாகித்துப் பேசப்படுகிறதென்பதுடன், கிட்டிய அண்மைக் காலத்தில் இத்திட்டம் நிறைவேறுவிடில், மின் திட்டம் அனைத்திலும் பூரண உடைவு நேரிடுமென யான் திடமாக நம்புகிறேன் மின்சாரசபை இதனை மிகவும் அத்தியாவசியமான விடயமெனக் கருத்தில் கொண்டு, புதிய பொறித் தொகுதிகளை உடனடியாக நிறுவுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டிய வேளை வந்துவிட்டது.

அரசாங்கமும் திரட்டிய மற்றும் புதுப்பித்த சம்பள விகிதங்களைப் பணியாளர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான தொகையை மீளளிப்புச் செய்யவில்லை. சம்பள உயர்வுகள் 25 இல் இருந்து 30 விகிதத்தால் மன்றத்தின் செலவுகளை மேலதிகப் படுத்தியுள்ளன. கிட்டத்தட்ட 80 விகிதமான எமது வருவாய் தாபனச் செலவுகளில் செலவாகிறது. இது விடயத்தை அமைச்சு எல்லைமீறிய அத்தியாவசியமானதொன்றெனக் கருதி யாதேனும் நிவாரணம் வழங்கப் பார்த்துக் கொள்ளுமென ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது. சிறுவர் மற்றும் பிரசவ நிலையங்கள் முழுத் தொகையில் இயங்குகின்றன வென்பதுடன், பால் உணவுகளுக்கும் மருந்துகளுக்கும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பெறுமதியளவுக்கு இச்சேவையில் [illegible] சில விடப்படுகின்றது. விளையாட்டரங்கு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக மேற்கொண்டு ஏதுவித சிரமங்களும் சம்பவிக்க மாட்டாவென [illegible] திர்

பல்வேறு விடயங்களில் அவர் எமக்கு அளித்த அளவிடற்கரிய ஒத்தாசைக்கு, ஊக்கம் மிக்க எமது உள்ளூராட்சி அமைச்சருக்கு நாம் ஆழ்ந்த நன்றியுடையவர்களாகவும், கடமைப்பாடுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மர வரியை மன்றத்திற்கு அளிக்க வேண்டுமென்ற விடயத்தையும் யான் எடுத்துக் கொண்டுள்ளேன் என்பதுடன், தற்போதுள்ள அனுதாபம் மிக்க அமைச்சருடன், நிறைவேற்றப் படுவதில் நீண்ட காலமாகக் காலங் கடத்தப்பட்டு வந்த இது விடயமும் கூட, எமக்கு அனுகூலமாகவே தீர்க்கப்படுமென்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அமைச்சர் எல்லாக் காலங்களிலும் எமது கோரிக்கைகளையும், பிரச்னைகளையும் கிரகித்து ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதுடன், அவர் ஆட்சிக் காலத்தில் இந் நாட்டில் உள்ளூராட்சி பெருமளவு விருத்தியடையுமென்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது.

நகரின் நலன்களைப் பாதிக்கும் விடயங்களில் மன்ற உறுப்பினர் எமக்கு அளித்த அவர்களது பூரண ஒத்துழைப்புக்குஎனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல்வேறு கட்சிகள் இருந்த பொழுதிலும், எம்மிடையில் மாறுபாடான கருத்துக்கள் நிலவிய பொழுதிலும், பொது நலனைப் பாறுத்த விடயங்களில் இவ் வேறுபாடுகள் யாவும் மூழ்கடிக்கப்பட்டு, உறுப்பினர் அனைவரும் தடங்கலற்ற தாராளமான ஒத்துழைப்பை மாநகர முதல்வர்என்ற வகையில் எமக்கு நல்கியதன் மூலம், மன்றத்தின் தீர்மானங்களையும் கொள்கைகளையும்

## ஜெயராஜன் எழுதுவது

'இசைப்பேரறிஞர்' எம். எஸ். சுப்புலட்சுமியின் இன்னிசையை சென்னை வானொலி மூலம் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன். இந்த சங்கீத சீஸனில் அவரது இரு 'கச்சேரி'களை ஒலிபரப்பியதற்காக இந்திய வானொலிக்கு என் நெஞ்சம் நன்றி தெரிவித்தது.

இசையின் நோக்கம், பக்தியை வளர்த்து இறைவனுடன் லயப்படுத்துவதே என்று எம். எஸ். தமது தலைமைஉரையில் அழகாகச் சொன்னார். அவர் சொன்னபடியே அவரது இன்னிசை நம்மை இறைவனுடன் இணைந்து பேரானந்தத்தில் ஆழ்த்துவதாக இருந்தது. இந்த உபகாரத்துக்காக அவருக்கு நாம் எப்படி நன்றி தெரிவிப்பது? அவரும் அவரது சாரீரமும் நீடூழி சுகமே இருந்து உலக மக்களுக்கும் பேரின்பமளிக்க வேண்டுமென்று என் உள்ளம் பிரார்த்தனை செய்கிறது. என்னைப் போல் லட்சக்கணக்கான மக்கள், அவரது இன்னிசையைக் கேட்டு இன்புற்றிருக்கலாம். அவர்களது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் எம். எஸ்.ஸுக்கு பரிபூரணமாக இருக்கும்.

0 0 0

சென்ற ஞாயிறன்று அவரது கச்சேரியை ரஸித்துக் கொண்டிருக்கையில் திடீரென்று அதைக் 'கட்' செய்துவிட்டதும் அப்படிச் செய்த வானொலி அதிகாரிகளை என்னைப்போல் பலர் 'சபித்து' இருப்பர். செய்திகளை அறிவிக்க வேண்டியதுதான். ஆனல் இந்தமாதிரி நல்ல சமயங்களில் ஒரு வேளை செய்தியை அறிவிக்காவிட்டாலோ, அல்லது சில நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாலோ என்ன குடிமுழுகிப் போய்விடப் போகிறது? வானொலி, அரசாங்க ஏகபோக ஆதிக்கத்தில் இல்லாமல் தனிப்பட்ட ஸ்தாபனமாக இயங்கினல் இவ்விதம் ரஸிகர்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்குவார்களா? அல்லது இசைவிழாவுக்கென விசேஷ மீட்டரில் ஒலிபரப்ப முடியாதா?

அருமையான நல்ல விருந்தை சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், மென்னியை திடீரெனப் பிடித்து விரட்டினல் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது, இந்திய வானொலியின் இந்த நடத்தை இனியாவது ரஸிகர்களின் உணர்ச்சிகளையும் தேவையும்மதித்துவானொலி அதிகாரிகள் காரியம்செய்ய வேண்டுமென்று இதை எழுதலானேன். ஆனல்போட்ட திட்டத்தை மாற்றி அமைக்க அவர்களுக்கு உரிமை ஏது? தமிழகத்துக்கென ஒரு தனி வானொலி நிலையம் இயங்கினல் எவ்வளவோ சிறப்பாக இருக்கலாம், ஆனல் அது அரசியல் ஆகிவிடுமோ? தப்பு தப்பு!

0 0 0

சென்ற 25-ந் திகதி இரவு 9-30 மணிமுதல் தமிழ் இசைவிழாவிலே நமது சுவாமிநாததம்பிரான் சுவாமியின் இன்னிசை கதாகாலட்சேபம். அன்றுமாலை 5 மணிக்கு தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, ஸ்ரீ கி. வா. ஜ. அவர்கள் தலைமையில் மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் ஸ்ரீ தம்பிரான் அவர்களுக்கு ஒரு வரவேற்பு உபசாரமளித்தது. வரவேற்பு முடிந்ததும் அதே கோயிலில் 'பூம்பாவை' கதாகாலட்சேபம் நடைபெற்றது. இப்பதியில்தான் ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், பூம்பாவையை உயிர்த்தெழுப்பியரென்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைக்கு வருமுன், கோவையிலே கௌமார மடத்தில் குருபூசையிலே அவர் கதை செய்தார். அதன்பிறகு அவிநாசியிலும் மற்றோரிடத்திலும் கதைகள் நடந்தன. அவிநாசி க்ஷேத்திரத்தில்தான் முதலையுண்ட பாலனை சுந்தரமூர்த்திசுவாமிகள் எழுப்பியதாகும்.

ஒவ்வொரு முறையும் தம்பிரான் அவர்கள் தமிழகத்தில் புதுப்புது இடங்களில் திக்விஜயம் செய்து ஞானதானம் வழங்கி, ஈழத்துக்குப் பெருமை சேர்க்கின்றார். ஈழத்துக்கலைஞர்களை தமிழகம் மதிப்பதில்லையென்று இனியார் சொல்லமுடியும்?

0 0 0

இலங்கை வானொலியின் ஆதரவில் தமிழகத்திலி

பற்பல தடவை எமக்குச்

கஷ்டமில்லாமல் பெறக்கூடிய மீன்களையாவது நமது நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்து அந்நிய செலாவணியைச் சம்பாதிப்பதற்குப் பயன்படுத்தலாம்

இலங்கை கடலாற் சூழப்பட்டிருந்தாலும் கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களுக்கு வடக்கிலிருந்துதான் பெருமளவில் மீன் ஏற்றுமதி செய்யப்படுகின்றது மீன் பிடிக்கும் தொழிலில் ஆற்றலும் அனுபவமுமுள்ளவர்கள் வடக்கிலிருக்கிறார்கள் என்பதையும் வடபகுதிக் கடலில்தான் நல்லரக மீன்கள் கையாளவேண்டிய திட்டங்களையும் கொண்டுவந்து செயல்படுத்துவதற்கு வேண்டிய பணிகளைச் செய்யவேண்டும்.

கடற்றொழில் அபிவிருத்திச் சபைகள் மட்டுமல்லாது கடல்படு திரவியங்களை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்தி நமது நாட்டின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நாட்டின் வருமானத்தை விருத்திசெய்யவும் வழிவகைகளைக் காண்பதற்கான கடற்றொழில் ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவ முன்வருவதும் சிறந்ததாகும்

# ‘சுருட்டுத் தொழிலுக்கு பாதுகாப்புச்சபை வேண்டும்’

சுன்னாகம், செவ்வாய்

“சுருட்டுத்தொழில் கூடிய விரைவில் முன்னேற்றமடையாவிட்டால் வடமாகாணத்தில் பதினயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வறுமையில் சிக்கிக்கஷ்டப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும். முன்பு மலையாளப் புகையிலை ஏற்றுமதியின் காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பொருளாதாரத்தை இழந்தனர். சுருட்டுத் தொழில் பாதிக்கப்பட்டால் சுருட்டுத் தொழிலாளரோடு சேர்ந்து விவசாயப் பெருமக்களும் பொருளாதாரத்திலும் வறுமையிலும் சிக்கிக்கஷ்டமடையவேண்டிய நிலைமை ஏற்படும்.”

இவ்வாறு சுருட்டுத் தொழில் குறைபற்றி ஆராய்வதற்கு திரு. த. சிவஞானம் தலைமையில் கூடிய கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உடுவில் தொகுதி எம். பி. திரு வி தர்மலிங்கம் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், உற்பத்தி வரியிலிருந்து சுருட்டுத்தொழிலுக்கு வரிக்குறைப்பு வேண்டுமெனக் கேட்டபோது, சுருட்டு மக்களுக்கு அத்தியாவசியமானதல்லவெனக்கூறி வரிக்குறைப்புக்கு மறுப்புத்தெரிவித்ததாகவும் எனினும் சுருட்டுத் தொழிலாளரின் பிரச்னைகள் பற்றி அரசுடன் பேசி ஆவனசெய்ய முயல்வதாகவும் சொன்னர்,

பதினலாயிரம் சுருட்டுத் தொழிலாளர்கள் நாட்டிலுள்ளதாகவும் இருந்தும் இன்று இரண்டாயிரம் தொழிலாளர்கூட சேமலாபநிதிபெறும் நிலையில் இல்லையென்றும், எல்லோருக்கும் சேமலாபநிதிநிதி கிடைக்கவும் மாதத்தில் 24 நாட்கள் வேலைவாய்ப்புப் பெறவும் தொழிலாளர் ஒன்றுகூடி பாடுபட வேண்டுமென்றும் தலைவர் திரு. சிவஞானம் தமது உரையில் குறிப்பிட்டார்.

உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

“சுருட்டுத் தொழிலாளர் முன்னணியில் உழைக்க வேண்டும். சுருட்டுத்தொழிலுக்கு ஒரு பாதுகாப்புச் சபை ஏற்படுத்தப்படவேண்டும். தவறின் தொழிலாளர் தங்களுடைய உரிமைகளை வாதாடியும் பெற முடியாது போய்விடும். இதனால் கமத்தொழிலும் பாதிக்கப்படும். கூடிய விரைவில் பாதுகாக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியே ஆகவேண்டும் தொழில் முன்னேற்றமடைந்தால் தான் தொழிலாளர் முன்னேற்றமடைய முடியும்.”

திரு. எஸ். ஜே வீ செல்வநாயகம், பஸ்தொழிலாளர் கழகப் பிரதிநிதி திரு. மு. ஆலாலசுந்தரம், அளவெட்டி தெய்வேந்திரம் ஆகியோரும் பேசினர்.

— —

பருத்தித்துறை, செவ்.

நத்தார் தினத்தையொட்டி நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி ஸ்பேஸ் கோஷ்டியினர் வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியை 8—0 கோல்களால் தோற்கடித்து வெற்றியீட்டியது.

திரு. எம். வேதாபரணம் மத்தியஸ்தம் வகித்தார்.

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் ... 30 ... [illegible]

...வராக இருந்த பொழுது 1963ல்இத்திட்டம்தொடங்கப்பெற்றது ஆயினும் ஏதோ ஒரு காரணத்தால், மன்றமும், ஏன் சிறப்பு ஆணையாளர்களும் கூட இவ்விதரிப்புக்களை மேற்கொள்ளத் துரந்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை. நிர்வாகம் சுமுகமாகத் தொழில்படுவதற்கு இடையூறாக அலுவலகத்தில் மட்டுமீறிய இடநெருக்கடி நிலவுவதை உறுப்பினர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதில் எதுவித சந்தேகத்திற்கும் இடமில்லை. இக்கட்டிடம் பூர்த்தியுற்றதும், இவ்விடநெருக்கடியைக் குறைத்துக்கொள்ளலாமென நம்பப்படுவதுடன், சிறந்தமேற்பார்வையை மேற்கொள்ள எமக்கு இயலத்தக்கதாகவும் பொதுமக்களுக்கு மன்றத்துடனை தமது சகல காரியங்களையும்இலகுவாகமுடித்துக்கொள்ள வழியுண்டாக்குவதாகவும். சகல திணைக்களங்களும் மாநகரமண்டபத்தில் செயல்படும்பொருட்டு. மின் பொறியியலாளரும், அவர் தம் பணியாளர்களும் மாநகரமண்டபத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள். இறுதியில் வேலைத்தலத்திற்கும், மின்சார-பொதுக்களஞ்சியங்களுக்கும் நல்ல இடவசதியை ஏற்படுத்தக் கூடியதாக, பின்பு மராமத்து பொறியியலாளரையும், சுகாதார வைத்திய அதிகாரியையும் மாநகர மண்டபத்திற்குள் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒருவேளை அனைத்துலகிலுமே ஆகக்குறைந்த திரட்டி விகிதங்களை நாம் தாம்விதிக்கிறோம் என்பதை உறுப்பினர்கள் தெரிந்திருக்கிறார்களென்பதில் சந்தேகம்கிடையாது. இவ்விகிதத்தை மிகச் சிறிதளவாவது உயர்த்துவதற்கு அடுத்தடுத்து எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லையென்பதோடு, சிறப்பு ஆணையாளர் ஆட்சிக்காலத்திலும்கூட, இதுவிடயமாக எதுவித நடவடிக்கைதானும் மேற்கொள்ளப்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களை உயர்த்திலல் அல்லது, வரியிறுப்பாளர்களுக்கு உன்னதமான சிறந்த சௌகரியங்களைச் செய்து கொடுப்பது மிகமிகக் கடினமாகவிருக்கும். திரட்டிய விகிதங்களுக்கான பல லட்சம் தொகைபடும் நிலுவைகளும் உள்ளன எவ்வளவுதான் விரும்பத்தக்கதாக விரும்பினும் இப் பாரிய தொகையை அறவிடுவதற்கு ஆதனங்களை நடுக்கட்டல் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருக்குமென்பதுடன் இது விடயத்தில் மன்றத்தினதும் பணியாளர்களதும் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது. ... ஒத்துழைப்பு

ப...படுத்த விரும்புகிறேன் வி...யோகம் மிகவும் அதிருப்தி தருவதாயுள்ளது. ஆயினும், அதற்கானகுற்றத்தை எம்மீது சுமத்த முடியாதென்பதை யாவரும் அறிந்திருப்பதாகக் கொள்ள முடியாது. மின் பிரயோகிக்கும் செய்யும் சுன்னகம் மத்திய மின் நிலையைப் புறக்கோட்டை மின் நிலையத்தில் உபயோகிக்கப்பட்டும், நீடித்து வழங்கியதால் பயனற்றுப் போனதும் பயனுள்ள சேவைக்கான அதனது சாதாரண கால எல்லையைக் கடந்ததுமான பொறித் தொகுதிகளால் நிறுவப்பட்டது. சுன்னகத்தில் மாருத நிலையான உடைவுகள் நேரிடுகின்றனவென்பதுடன்விடயங்களைச் சீராக்க திரும்பவும் திரும்பவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் சாதகமான பதில் வாச...

...வுக்கு இச்சேவையில் ...சில விடப்படுகின்றது. விளையாட்டரங்கு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக மேற்கொண்டு எதுவித சிரமங்களும் சம்பவிக்க மாட்டாவென ...திர்பார்க்கப்படுகிறது. நூல் நிலையக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்ய நிதி சேர்ப்பதற்கு களியாட்டு விழா ஒன்றையும், கலாச்சார கைத்தொழில் விவசாயப் பொருட் காட்சி ஒன்றையும் ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளவென்பதுடன், கிழக்கிலே மிக நேர்த்தியானதென எமது நூல் நிலையம் கணிக்கப்படும்படியாக மிக விரைவில் நூல் நிலையத்தின் ஏனைய பக்கப் பகுதிகளும் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

...கப்பட்டு, உறுப்பினர் அனைவரும் தடங்கலற்ற தாராளமான ஒத்துழைப்பை மாநகர முதல்வர்என்ற வகையில் எமக்கு நல்கியதன் மூலம், மன்றத்தின் தீர்மானங்களையும் கொள்கைகளையும் செயல் படுத்துவதில் எமக்கு நிரம்பிய வலிமையைத் தந்திருக்கிறார்களென்பதையிட்டு யான் மகிழ்ச்சியடைகிறேன். எமது கடமைகளை நிறைவேற்றுவதில் பல வகையிலும் ஒத்துழைத்த பணியாளர்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவிக்க அவாவுறுகிறேன். உறுப்பினர்களதும், பணியாளர்களதும் ஒத்துழைப்பு இல்லாது, சொற்ப நிதி வசதிகளுடன் நகருக்குப் பல திறப்பட்ட இத்தனை சேவைகளை ஆற்றியிருத்தல் சாத்தியப்பட்டிராது.

உள்ளாக்குவார்களா? அல்லது இசைவிழாவுக்கென விசேஷ மீட்டரில் ஒலி பரப்ப முடியாதா?

அருமையான நல்ல விரு...

...ரர். ஈழத்துக்கலைஞர்களை தமிழகம் மதிப்பதில்லையென்று இனியார் சொல்ல முடியும்?

0 0 0

இலங்கை வானொலியின் ஆதரவில் தமிழகத்திலிருந்து சில சினிமாக் கலைஞர்கள் இங்குவர இருப்பதாக அறிய மகிழ்ச்சியாக இருந்தது. எம். எஸ். போன்ற இசைக்கலைஞர்களையும் வரவழைக்க முடிந்தால் இங்கு பல நல்ல திருப்பணிகள் வளரவும் கூட பயன்படலாம். அவர் இங்கு வந்து பல வருடங்கள் ஆகின்றன. இதுபற்றி எந்தக் கலையன்பர்களும் முயற்சி எடுப்பார்களா?

......

# ஈழத்துக்குப்பெரும்புகழீட்டி இன்று நாடுதிரும்பும்தம்பிரான்சுவாமிகள்

— வித்துவான் கணபதிப்பிள்ளை —

( நல்லை ஞானசம்பந்தர் ஆதீன சைவசித்தாந்த கௌரவ விரிவுரையாளர் )

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, சென்னை தமிழிசைக் கழகம் ஆகியவற்றின் அழைப்பின்பேரில் தமிழ்நாடு சென்று கதைகள் செய்து இன்று நாடுதிரும்பும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளுக்கு இன்று ஈழத்துப் பொதுமக்கள் சார்பில் வரவேற்பளிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள ஆத்மீகத் தொடர்பு தொன்று தொட்டு நின்று நிலவிவருகின்றது. இலங்கையிலே தழைத்து ஓங்கி வளர்ந்துவரும் இருபெருஞ் சமயங்களாகிய இந்துசமயமும் பௌத்த சமயமும் இத்தொடர்பினைக் காலத்திற்குக்காலம் வளர்த்துவருகின்றன.

இந்தியாவிலேதான் இலங்கையிலே ஆத்மீககலாசார கலைமரபுகள் செழித்து வளர்ந்தன எனப் பொதுவாகக் கருதப்படினும் காலத்திற்குக்காலம் இலங்கையினலும் இந்தியா பெரும் பயன்பெற்று வந்துள்ளது என்பதற்குப் பற்பலசான்றுகள் உள, இந்தவகையில் இந்தியாவிற்கு மாத்திரமன்று அகில உலகிற்குமே இலங்கைப் பௌத்தமதம் வழிகாட்டியாக ஒளிர்கின்றது. இந்தியாவில் காசிவாரணசியில் அனகாரிக தர்மபாலா அவர்கள் ஆற்றிய பணி இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று சைவசமய சம்பந்தமாகக் குறிப்பாகச் சென்ற நூற்றுண்டில் தமிழகத்திற்குப் பலவகைளில் உதவுவதில் ஈழம் பெரிதும் துணைபுரிந்தது.

ஈழநாடு தந்த துறவியாகிய இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்பத்தாண்டுகளுக்கு முன்வரை தமிழகத்திலே சைவசித்தாந்தச் செந்நெறி தழைத்தோங்க ஆற்றிய அரும்பெரும் பணி யாவரும் அறிந்ததே.

நாவலர் பெருமான் இங்கும் அங்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளாலன்றோ சைவசமயம் அங்கும் இங்கும் சுடர்விட்டு ஒளிர்கின்றது. அவர்கட்கு முன்னும் பின்னும் பற்பல சான்றோர்கள் இந்தியாவிலே செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்க அளப்பரும்பணிகள் ஆற்றினர்.

காசிவாசி செந்திநாதையர் சுவாமிகள் கோப்பாய்ச் சபாபதிநாவலர், வண்ணர் பண்ணைச் சுவாமிநாத பண்டிதர், மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை, புலோலி மகாவித்துவான் கதிரைவேற்பிள்ளை தமிழ்தந்த தாமோதரனார், திருக்கோணமலை கனகசுந்தரம்பிள்ளை முதலியோர் ஆற்றியபெரும் பணிகள் என்றும் நின்று நிலவுகின்றனவாம்.

சென்ற நூற்றுண்டுபோல இந்நூற்றுண்டிலும் இலங்கையிலும் இந்தியாவிலும் மாத்திரமன்றி மலேசியா முதலிய தமிழும் சைவமும் நிலவும் நாடுகள் எங்குஞ் சென்று அளப்பெருஞ் சேவை ஆற்றிவரும் பேறு பெற்றவர்கள் நல்லைஞான சம்பந்தர் ஆதீனகர்த்தராகிய ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் என்பது யாவரும் அறிந்ததே.

தம்பிரான் சுவாமிகள் நூறு தடவைக்குமேல் வெளிநாடுகளுக்குவிஜயஞ் செய்து ஆங்காங்கு தெய்வத்திருநெறியையும் செந்தமிழ்ச் செல்வத்தையும் வாரிவழங்கி வெற்றிவாகையுடன் நமக்கெல்லாம் பெரும் புகழீட்டி மீண்டுள்ளார்.

இம்முறை தம்பிரான்சுவாமிகள் தமிழ்நாடு சென்று மீண்டு வருவது வரலாற்றிலே தனியிடம் பெறவேண்டிய ஒன்றாகும். இந்தியா செல்லும் பொழுதெல்லாம் பல்வேறு இடங்களில் சுவாமிகள்கதாப்பிரசங்கம் நிழ்த்துவதும் அவற்றை ஆயிரமன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆடாமல் அசையாமலிருந்து பக்தி சிரத்தையுடன் மணிக்கணக்கில் இருந்து கேட்டுச் சிவநெறிச்செல்வராகத் திகழ்வதும் சாதாரண நிகழ்ச்சிகள்

மதுரையில் மீனாட்சி அம்மன் சந்நிதானத்திலே சென்ற வருடம் சுவாமிகள் தொடர் பிரசங்கம் நிகழ்த்தியபொழுது அங்கு குழுமிய மக்கட்திரளைக் கணக்கிட முடியாமலிருந்ததென நேரிற்கண்டு மகிழ்ந்த பலர் பற்பல தடவை எமக்குச் சொல்ல நாம் அடைந்தஇன்பத்திற்கு அளவில்லை.

இலங்கையிலாயினும் இந்தியாவிலாயிலும் பெருந்திரளானமக்களைத் தம்பால் ஈர்க்கும் பெரும்பேச்சாளராக விளங்குகின்றவர்களாகச் சுவாமிகளே திகழ்கிறார்கள் என்பதும் ஈழம்செய்த தவத்தின் சிறப்பைக் காட்டுவதாகும்.

தவத்திரு தம்பிரான்சுவாமிகள் தவத்திரு குன்றக்குடி அடிகளாரைத் தலைவராகவும் ஏனைய திருமடங்களின் மகாசன்னிதானங்களையும்உறுப்பினராகக்கொண்ட தமிழகத் தெய்வப் பேரவையின் அழைப்பையும் பிரசித்திபெற்றசென்னைத் தமிழிசைச் சங்கத்தின் அழைப்பையும் ஏற்று இம்முறை இந்தியாவிற்கு விஜயஞ் செய்தார்கள்.

எட்டு மகாசந்நிதானங்களின் சமூகத்தில் இலட்சக்கணக்கான மக்கட்குத் திருவண்ணமலையில் திருக்கார்த்திகைத் தீபதரிசனத்தன்று அருள் உபதேசஞ் செய்தார்கள் இந்நிகழ்ச்சி நம்நாடு செய்த தவப்பேருகும். சங்கீத உலகிலே சிகரமாக விளங்குகின்ற சென்னைத் தமிழிசைச்சங்கம் நடாத்தும் இசைவிழாவிலே சுவாமிகள் சங்கீத கதாப் பிரசங்கமூலம் அருள் மழைபொழிந்தமை இம்விஜயத்தின் சிறப்பு அம்சங்களுள் ஒன்று.

இவ்வாறு செந்தமிழ் நாடெங்கும் சிவநெறியைப் பரப்பிவரும் திருவருட் செல்வராகிய தம்பிரான் சுவாமிகளை இன்றுமாலை 4 மணிக்குதிருச்சி விமான நிலையத்தில் தமிழ்நாட்டுப்பெருமக்கள் வழியனுப்புவிழா நடாத்துகின்றார்கள். அவ்வழியனுப்பு உபசாரத்தையும் பெற்று இங்கு மீளும் சுவாமிகளை ஈழத்துப்பொதுமக்கள் சார்பில் பற்பல பிரமுகர்கள் இன்று பலாலி விமானநிலையத்தில் வரவேற்கக் கூடுகிறார்கள்.

அறநெறிக் காவலரும் சைவத்தமிழ் முதுபெரும் செல்வருமாகிய முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் ஆதீனத்தில் வரவேற்பு விழா நடைபெறுகின்றது. நல்லூர் வட்டாரப் பிரதிநிதியும் மாநகர உதவித்தலைவருமாகிய சிவநெறிச் செம்மல் ஆ. துரைராஜசிங்கம் விசேட பேச்சாளராகக் கலந்துகொள்கின்றார்கள். இவற்றை திருவாளர்கள் சி. முத்துக்குமாரசுவாமி, ஆர். குருசாமி ஆகியோர் செயலாளராக நின்று நடாத்துகிறார்கள்

## இடைத்தெரிவில் இன்றைய நாடகங்கள்

யாழ்ப்பாணம், புதன்

சித்தன்கேணி சிவசெல்வி கலாமன்றத்தினரின் யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தும் யாழ். மாவட்ட நாடகப்போட்டிக்குரிய இடைத்தெரிவு இன்று மூன்ருவது நாளாக யாழ். ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் நவடபெறுகிறது. பின்வரும் நாடகங்கள் இன்றைய தினத்தில் பங்கு பற்றுகின்றன.

“பூம்பொழில்”, “புலமைக்குத் தலைமகன்”, “தியாகச்சுடர்”, “சங்கிலியன் சிறைப்படல்”, “தீர்ப்பு”, “ஒடுக்கப்பட்டவன்”, “இரத்தமுத்திரை”, “அன்னையின் ஆணை”, “உடைந்த உள்ளம்”.

... ...

## வடமராட்சி கோஷ்டிக்கு வெற்றி

பருத்தித்துறை, செவ்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நவாந்துறை உதைபந்தாட்டக் கழகத்திற்கும் வதிரி டயமண்ட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப்போட்டியில்நவாந்துறை கோஷ்டி 3-1 கோல்களால் வெற்றியீட்டினர். திரு. எம். வேதாபரணம் மத்தியஸ்தம் வகித்தார்.

யாழ்ப்பாணம் ‘பாடுமீன்’ கோஷ்டிக்கும், வடமராட்சி தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வடமராட்சிக் கோஷ்டி 3-2 கோல்களால் வெற்றியீட்டியது திரு. த. இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org